துரிசு - குறறம; துககம்; கிருத்திரமம்.
துரியநிலை - அருள்நிலை.
துரியம் - தன்மயமாய் நிற பது; பொதியெருது; சுமக்கை.
துரு - செம்மறியாடு; இருப்புக்கறை; குற்றம்.

**துருக்கம்** - கத்தூரி; குங்கும மரம்; மலையரண்; காடு; மதில்; கலக்கம்.

**துருத்தி** - ஆற்றிடைக்குறை; உலையூதுகருவி; தோல்.

**துருநாமம்** - மூலநோய்.

**துருப்பு** - சிறு சேனை.

**துருவம்** - ஒரு நட்சத்திரம்; நிலவட்டமுனை; ஒப்பு.

**துருவல்** - துருவுகை; தேடுகை; தேங்காய்த் துருவல்.

**துருவை** - பார்வதி.

**துரோணம்** - பதக்கு; வில்; காக்கை; தும்பை வகை.

**துர்க்கம்** - மலைமேற கோட்டை அரண்.

**துர்க்கை** - காளி.

**துர்ப்பலம்** - பலவீனம்.

**துர்லபம்** - பெறுதற் கருமையானது.

**துலங்குதல்** - விளங்குதல்; சிறததல்; தெளிவாதல்.

**துலாம்** - நிறைகோல; ஒரு நிறையளவு; துலாககட்டை.

**துலாம்பரம்** - துலக்கம்; வெளிப்படை; ஐப்பசி வானம்.

**துலை** - நிறைகோல்; ஒப்பு; தோட்டம்.

**துல்லியம்** - சுத்தம்; ஒபபு; சரி.

**துவக்கு** - கட்டு; தொடர்பு; சங்கிலி; பறறு.

**துவக்குதல்** - கட்டுதல்; தொடங்குதல; கட்டுண்ணுதல்.

துவசம் - கொடி; அடையாளம்.
துவசர் - கள் விற்போர்.
துவடர் - பகைவர்.
துவட்சி - ஒசிவு; வாடுகை; சோர்வு.
துவட்டா - விசுவகர்மா.
துவந்தனை - பந்தம; தடை.
துவம் - அசையாநிலை; இரண்டு; (பண்புணர்த்தும் ஒரு வடமொழி விகுதி).
துவயம் - இரண்டு.
துவர் - விறகு; துவர்ப்பு; பவளம்; காவி; சிவப்பு.
துவர்தல் - புலாத்துதல்; உலர்த்தல்; வகிர்தல்; பிரிதல; முதிர்தல்.
துவர்த்தல் - சிவத்தல; பூசுதல்.
துவலை - நீர்த்திவலை; கூட்டம்; மழை.
துவல் - அருச்சனைப்பூ; விரைவு; சாதல்.
துவளறுதல் - நிறைதல்; குவிதல்; பொருந்தல்.
துவளுதல் - துடித்தல்; வருந்துதல; அடர்தல; வளைதல்.
துவாதசம் - பன்னிரண்டு.
துவாரம் - தொளை; வாயில்; வழி; மூலம்.
துவாலை - துணித்துண்டு; பூசசு; மருந்து; குதகப்பெருக்கு.
துவிசன் - இருபிறப்பாளன்; பார்ப்பனன.
துவேஷம் - பகை.
துவை - மிதிகை; இறைச்சி; பிண்ணாக்கு; புளிங்கறி; துவையல்.

**துவைதம்**-கடவுளும் உயிரும் வேறென்பது.

**துவைதல்**-தோய்தல்; உறைதல்; கஞ்சியிடுதல்.

**துவைத்தல்** - ஆரவாரித்தல்; புகழப்படுதல்; கடைதல்; இடித்தல்; குற்றுதல்; சேர்த்து வைத்தல்.

**துவ்வு** - உணர்வு; நுகர்ச்சி; அனுபவம்; இழிவு.

**துவ்வுதல்** - நுகர்தல்; வலியுறுதல்; நீங்கி யொழிதல்.

**துழத்தல்** - துழாவுதல்.

**துழனி** - ஒலி.

**துழாய்** - துளசி.

**துழாவுதல்** - ஆராய்தல்; கலத்தல்; கிளறுதல்; அளைதல்.

**துளக்கம்** - அசைவு; அச்சம்; கலக்கம்; ஒளி.

**துளக்கு** - அசைவு; வருத்தம்.

**துளபம்** - துளசி.

**துளர்** - பயிரின் களை; களைக்கொட்டு.

**துளர்தல்** - கொத்துதல்; மணத்தல்.

**துளிநசைப்புள்** - வானம்பாடி.

**துளிர்** - தளிர்.

**துளுப்பிடுதல்** - கலக்குதல்.

**துளும்புதல்** - ததும்புதல்; மேலெழுதல்; துள்ளுதல; வருந்துதல்.

**துளைதல்** - நீர்விளையாடல்; அழுந்திக் கிடத்தல்.

**துள்ளல்**- துள்ளுகை; கூத்து; ஆடு; சலகொதுகு; துள்ளலோசை.

**துறக்கம்** - சுவர்க்கம்.

**துறத்தல்** - பற்றறுதல்; கைவிடுதல்; நீங்குதல்.
**துறவறம்** - பற்றற்ற நிலை.
**துறவோர்** - முனிவர்.
**துறுதல்** - உருண்டைக்கல்; குன்று; பாறை.
**துறுதல்** - நெருங்குதல்; குவிதல்; அடைதல்.
**துறுத்தல்** - திணித்தல்; அமைத்தல்; அமுக்குதல்.
**துறுமுதல்** - நெருங்குதல்; திரட்டுதல்.
**துறை** - இடம்; கடற்றுறை; நீர்த்துறை; பொருட் கூறுவகை; ஒழுங்கு; உபாயம்.
**துறைபோகல்** - முடிவுபோக அறிதல்.
**துறைவன்** - நெய்தனிலத் தலைவன்.
**துற்றுதல்** - உண்ணுதல்; நெருங்குதல்; குற்றுதல்.
**துனி** - வெறுப்பு; கோபம்; புலவி நீட்டம்; பிரிவு; துன்பம்; வறுமை; நோய்.
**துனைதல்** - விரைதல்.
**துன்றுதல்** - நெருங்குதல்; பொருந்துதல்.
**துன்னம்** - தையல்; ஊசித்
**துன்னூர்** - பகைவர். [துளை.
**துன்னுதல்** - பொருந்துதல்; செறிதல்; அணுகுதல்; செய்தல்; ஆலோசித்தல்; தைத்தல.

## தூ

**தூ** - தூய்மை; வெண்மை; வலிமை; பற்றுக்கோடு; இறைச்சி; இறகு; இகழ்ச்சிக் குறிப்பு.

**தூக்கு** - தொங்கும் பொருள்; ஒரு நிறையளவு; செய்யுள்; சுவடித் தூக்கு; தாளவகை.
**தூக்குதல்** - உயர்த்துதல்; நிறுத்தல்; அலைத்தல்; ஆராய்தல்; தொங்கவிடு தல்; கைகொடுத்தல்.
**தூங்கல்** - தொங்குதல்; தூங்குதல்; அசைதல்; சாதல்; கால நீட்டித்தல்; ஆடுதல்; மிகுதல்; தங்குதல்.
**தூசம்** - யானைக் கழுத்திடு கயிறு.
**தூசி** - கொடிப்படை; போர்; குதிரை; புழுதி.
**தூசு** - ஆடை; பஞ்சு; முன னணிப்படை.
**தூணி** - அம்புப்புட்டில்; நாலு மரக்கால்.
**தூணித்தல்** - பருத்தல்.
**தூணீரம்** - அம்புக்கூடு.
**தூது** - பருக்கைக்கல்; செய்தி; செய்தி கூறுவோர்.
**தூதை** - சிறு மரப்பானை; மட்கலம்.
**தூபி** - சிகரம்; உச்சி.
**தூமகேது** - வால்வெள்ளி; திமைக்குறி.
**தூமம்** - புகை; பானைச்சுனை.
**தூம்பு** - உட்டுளை; இசைக் குழல்; மதகு; நீர்ப்பத்தர்.
**தூய்மை**-பரிசுத்தம்; முத்தி; நன்மை.
**தூரிகை** - எழுதுகோல்.
**தூரியம்**-மங்கலப்பறைமுரசு.
**தூர்** - வேர்; சேறு.
**தூர்த்தல்** - நிரப்புதல்; அடைத்தல்; பெருக்கிச் சுத் தஞ் செய்தல்.

**தூர்த்தன்** - காமுகன்; கொடியோன்.
**தூலம்** - பருமை; கட்புலனுவது; உத்திரம். பருத்தி; ஆகாயம்.
**தூலிகை** - எழுதுகோல்; அன்னத்திற்கு.
**தூவல்** - அம்பிறகு; தளிர்; தூரியக்கோல்; நீர்த்துளி; மழை.
**தூவி** - பறவைஇறகு; எழுதுகோல்; சூட்டு; தூபி.
**தூளனம்** - நீறு பூசுதல்.
**தூளி** - புழுதி; பூந்தாது; குதிரை.
**தூறு** - புதர்; குவியல்; குறுங்காடு; சுடுகாடு; போர்; பழிச்சொல்; தீங்கு.
**தூறுதல்** - மழை தூவுதல்; கிளைத்தல்; சடைபற்றுதல்; பரவுதல்.
**தூற்றுதல்** - சிதறுதல்; பழிகூறுதல்; பரப்புதல்; அறிவித்தல்.
**தூஷணம்** - நிந்தைச்சொல்.

## தெ

**தெகிழ்தல்** - விளங்குதல்; வாய்விடுதல்; நிறைதல்.
**தெகுடாடுதல்** - திண்டாடுதல்.
**தெக்கணம்** - தெற்கு; வலப்பக்கம்.
**தெக்குதல்** - கொள்ளுதல்.
**தெங்கநாடு** - கடல்கொண்ட தமிழ்நிலப்பகுதி.
**தெங்கு**-தென்னை; தித்திப்பு; கோழிநால்; குழூஉக்குறிச்சொல்.

**தெட்டரசர்** - வெல்லப்பட்ட அரசர்.
**தெட்டு**-வஞ்சனை ; பறிக்கை.
**தெட்பம்**-தேற்றம்; தெளிவு.
**தெண்டு** - கோல்; கற்றை.
**தெண்டுதல்** - கிளப்புதல். மிண்டுதல்; நரம்பு வலித்தல்.
**தெண்ணர்** - அறிவில்லாதவர்.
**தெண்மை** - தெளிவு.
**தெந்தனம்** - கவலையின்மை.
**தெம்முனை** - போர்க்களம்.
**தெய்** - கொலை; தெய்வம்.
**தெய்வதை** - தேவதை.
**தெய்வப்புணர்ச்சி** - இயற்கைப புணர்ச்சி.
**தெய்வவீடு** - விமானம.
**தெய்வவுத்தி** - சீதேவி என்னும் தலைக்கோலம்.
**தெய்வாதீனம், தெய்வீகம்** - தற்செயல்; தெய்வச் செயல்.
**தெரிசம்** - அமாவாசை.
**தெரிதல்** - அறிதல்; தெரிந்தெடுத்தல்.
**தெரித்தல்** - விளக்குதல்; தெரிந்தெடுத்தல்; கொழித்தல்; பங்கிடுதல்.
**தெரிப்பு** - ஆராய்வு; சொல்லுகை; சீட்டு; பிரிப்பு.
**தெரிநிலை** - தெளிவுபட அறிவிக்கும் நிலை; ஆராய்ந்து அறியும் நிலை.
**தெரியலர்** - அறிவிலார்; பகைவர்.
**தெரியல்** - அறிதல்; பூமாலை.
**தெரிவை** - பெண்.
**தெருட்சி** - தெளிவு.

தெருட்டுதல் - உறுதிப்படுத்தல்; தெளிவித்தல்; ஊடல் தீர்த்தல்.
தெருமரல் - மனச் சுழற்சி; அச்சம்.
தெருள் - அறிவின் தெளிவு, ஞானம்.
தெவிட்டுதல் - தேக்கிடுதல்; அசையிடுதல்; திரளுதல்; நிறைதல்; ஒலித்தல்; உமிழ்தல்; அருவருத்தல்; அடைத்தல்; மறைத்தல்.
தெவிளல் - திரளல்.
தெவ் - பகை; பகைவன்; கொள்ளுகை.
தெவ்வுதல்-கவர்தல்; நிறைத்தல்; கொள்ளுதல்.
தெழித்தல் - அதட்டுதல்; முழக்குதல்; அடக்குதல்; வருத்துதல்; ஆரவாரித்தல்; நீக்குதல்.
தெளிஞன் - அறிஞன்.
தெளிதல் - தெளிவாதல்: ஒளிர்தல்; ஒழிதல்; அமைதியுறுதல்; அழிதல்; நம்புதல்.
தெளித்தல் - தெளிவித்தல்; வெளிப்படுத்துதல்; தூவுதல்; விதைத்தல்; சூளுறுதல.
தெளிர்தல் - ஒளிபெறுதல்.
தெளிர்த்தல் - ஒலித்தல்; செழித்தல்; மகிழ்ச்சியுறுதல்.
தெளிவு - விளக்கம்; சாறு; ஞானம்; ஆராய்ந்து கண்டது; நம்பிக்கை.
தெள்குதல் - தெளிவாதல்; தேங்குதல்.

**தெள்விளி** - இசைப்பாட்டு.
**தெள்ளியர்** - தெளிந்த அறிவினர்
**தெள்ளுதல்** - தெளிவாதல்; ஆராய்தல்; அலைகொழித்தல்.
**தெள்ளேணம்** - கைகொட்டிப் பாடியாடும் மகளிர் விளையாட்டு.
**தெறல்** - வெம்மை; கோபிக்கை; அழிக்கை.
**தெறிகெடுதல்** - நிலைகுலைதல்.
**தெறித்தல்** - சிதறுதல்; குலைதல்; துள்ளுதல; பிளத்தல்; உந்துதல்; முற்றுதல்.
**தெறுக்கால்** - தேள்.
**தெறுதல்** - சுடுதல்; தண்டித்தல்; அழித்தல்; கொல்லுதல்; பகைத்தல்; காய்ச்சுதல்; வருத்துதல்; அச்சுறுத்துதல்; திறைகொடுத்தல்.
**தெறுத்தல்** - நெரித்தல்; குவிததல்.
**தெறுநர்** - பகைவர்; கொலையாளர்.
**தெறும்** - ஒரு காட்டுக்கொடி.
**தெற்றல்** - மாறுபடுதல்; அறிவில் தெளிதல்.
**தெற்றி** - வேதிகை; திண்ணை; மேட்டிடம்.
**தெற்றுதல்** - இடறுதல்; தடைப்படுதல்; பிழைசெய்தல்; வாய்கொன்னுதல்; அலைத்தல்; கொடுத்தல்.
**தெற்றுவாசல்** - திட்டிவாயில்.
**தெற்றென** - விரைவாக.

தெற்றெனல் - தெளிதல்.
தெனுது - தெற்குள்ளது.
தென் - தெற்கு: அழகு: இனிமை; இசை.
தென்படுதல் - புலப்படுதல்.
தென்புலம் - பிதிரருலகம்; இயமலோகம்; பாண்டி நாடு.
தென்மலை - பொதியமலை.
தென்முனி - அகத்தியன்.
தென்றல் - தென்காற்று.
தென்றி - தெனறல்.
தென்றுதல் - சிதறுதல்; இனமபிரிதல்.
தென்னன் - பாண்டியன்; இராவணன்; இயமன்.
தென்றுதல் - கிளம்புதல்; நெமபுதல்.

## தே

தே - கடவுள்; கொள்ளுகை.
தேகவியோகம் - சாவு.
தேகி - ஆனமா.
தேக்கம் - ஏப்பம்; நிறைவு; தேஙகுகை; மனக்கலக்கம்.
தேக்கர் - மிகுதி.
தேசம் - நாடு; இடம்; தேசு.
தேசன் - ஒளியன்; பெரியோன்.
தேசாந்தரம் - அயல்நாடு.
தேசி - ஒரு கூத்து; அழகு; பெரிய குதிரை.
தேசிகம் - ஒரு நாட்டுச்சொல்; திசைச்சொல்; ஒளி; அழகு; பொன்.
தேசிகன் - குரு: தந்தை.
தேசு - ஒளி; அழகு: ஞானம்; பெருமை; பொன்.

**தேசோமயம்** - ஒளிவடிவம்; பேரொளி.
**தேடி** - அதிவிடயம்.
**தேட்டம்** - விருப்பம்; சேகரிக்கப்பட்ட பொருள்.
**தேண்டுதல்** - தேடுதல்.
**தேமா** - இனிப்புமாமரம்; யாப்புச்சீர்.
**தேம்** - இடம்; இனிமை; தேன்; மனம்; வண்டு; (ஏழனுருபு).
**தேம்பல்**-வாட்டம்; குறைந்த நிலை; பழம்பூ.
**தேயம்** - தேசம்; தேகம்; பொருள்; உடல்; தியாணிக்கத்தக்கது.
**தேயு** - நெருப்பு; மயக்கம்.
**தேய்த்தல்** - இல்லையாக்குதல்.
**தேய்வை** - சந்தனக் குழம்பு.
**தேரர்** - புத்த முனிவர்.
**தேரலர்** - பகைவர்.
**தேர்தல்** - ஆராய்தல்; அறிதல். தேடுதல்.
**தேர்த்தல்** - கலத்தல்.
**தேர்வு** - ஆராய்ச்சி; பயிற்சி; சுவை.
**தேவகுண்டம்** - தானாகவுண்டான ஊற்று.
**தேவகுலம்** - கோவில்.
**தேவகோடி** - ஒரு பெரிய எண்.
**தேவகோட்டம்** - கோவில்.
**தேவசேனுபதி** - முருகன்.
**தேவதாயம்** - கோவிலுக்கு விட்ட நிலம்.
**தேவதானம்** - கோவிலுக்கு விடப்பட்ட இறையிலி நிலம்.
**தேவபாணி** - தேவரை வாழ்த்தும் பாட்டுவகை.

**தேவயானம்** - கடவுளர் வாகனம்.

**தேவரன்** - கணவனுடன் பிறந்தான்.

**தேவராட்டி** - படிமத்தாள்; சன்னதக்காரி.

**தேவர்** - கடவுள்; திருவள்ளுவர்; அமரர்; மறவர் பட்டப் பெயர்.

**தேவாரம்**-மூவர் பாடல்கள்.

**தேறல்** - தேன்; கட்டெளிவு; சாரம்.

**தேருர்** - பகைவர்.

**தேறினர்** - ஆராய்ந்து கொண்ட நண்பர்.

**தேறு** - தேற்றுமரம்; துண்டு; கொட்டுகை; தெளிவு; உறுதி.

**தேறுகடை** - தீர்மானம்.

**தேறுதலே** - ஆறுதல்.

**தேறுதல்** - தெளிதல்; முதிர்தல்; நம்புதல்; துணிதல்.

**தேற்றம்** - தெளிவு; நிச்சயம்; உண்மையறிவு.

**தேற்று** - ஒரு மரம்.

**தேற்றுதல்** - தெளிவித்தல்; தெளிந்தறிதல்; குளுறுதல்; ஆற்றுதல்; சுத்தஞ் செய்தல்.

**தேனு** - பசு; எருமை; குதிரை.

## தை

**தை** - அலங்காரம்; மாதப் பெயர்.

**தைத்தல்** - தையலிடுதல்; பொருந்துதல்; ஊடுருவுதல்; கோத்தல்; அலங்கரித்தல்; பதித்தல்; சூழ்தல்.

**தைத்தியர்** - அசுரர்.
**தையல்** - தைத்தல்; பெண்; மேகம்; கட்டழகு.
**தைலம்** - எண்ணெய்; மருந்தெண்ணெய்.
**தைவதம்** - தெய்வம்; இசைச்சுரம்.
**தைவருதல்** - வருடுதல்; மாசு நீககுதல்; தடவி வருதல்.

## தொ

**தொகுதல்**-மறைதல்; சுருங்குதல்; ஒடுங்குதல்.
**தொகுத்தல்** - மதிப்பிடுதல்; திரட்டிக் கூட்டுதல்; சம்பாதித்தல்; அடுக்குதல்.
**தொகை** - சேர்க்கை; மொத்தம்; கணக்கு; புலவர்; கழகம்.
**தொக்கு** - துவையல்; தோல்; மரப்பட்டை; பற்று; அற்பம.
**தொங்கல்** - தொங்கற்பொருள்; பூமாலே.
**தொடக்கு** - கட்டு; பற்று; குஞ்சம்; திட்டு.
**தொடர்** - சங்கிலி; விலங்கு; நட்பு; பிசின்.
**தொடலே** - தொங்கவிடுகை; மாலே; மேகலே.
**தொடி** - கைவளே; தோள்வளே; பூண்.
**தொடிமகள்** - விறலி.
**தொடுதல்** - தொடல்; பிடித்தல்; தரித்தல்; தீண்டுதல்; தோண்டுதல்; பிழிதல்; நினேத்தல்; செலுத்துதல்; தொடங்குதல்; ஆணேயிடுதல.

**தொடுதோல்** - செருப்பு.
**தொடுத்தல்** - இயைதல்; கட்டுதல்; எய்தல்; வளைத்தல்; சேர்த்து வைத்தல்.
**தொடுப்பு** - விதைப்பு.
**தொடை** - அம்பெய்கை; கட்டுகை; நரம்பு; தொடர்ச்சி; கொத்து; பூமாலை; தாறு; பாட்டு; மேற்கால்; சந்து.
**தொடையல்** - கட்டுகை; தொடர்ச்சி; தோளணி; மாலை; தேன்கூடு.
**தொட்டிமை** - ஒற்றுமை; அழகு.
**தொண்டகம்** - ஆகோட்பறை; குறிஞ்சிப் பறை.
**தொண்டு** - அடிமைத்தனம்; கடவுள் வழிபாடு; பழமை; ஒன்பது.
**தொத்து** - தொத்துகை; திரள்; பற்று; பூங்கொத்து;
**தொந்தம்** - பிணைப்பு; கட்டு; சம்பந்தம்; இரட்டை.
**தொந்தி** - பெருவயிறு.
**தொந்தித்தல்** - பற்றுதல்; தாறுமாறுதல்; கலத்தல்.
**தொப்பாரம்** - ஒருவகை முடி; முட்டை.
**தொம்பன்** - கழைக்கூத்தன்.
**தொம்பை** - நெற்குதிர்.
**தொம்மை** - மிகப் பருத்த தன்மை; தொம்பை.
**தொய்** - குற்றம்.
**தொய்தல்** - சோர்தல்; கெடுதல்; துவளுதல்; உழுதல்.
**தொய்யகம்** - தலைக்கோலத் திறப்பு; தலைப்பாளை.

**தொய்யல்** - சோகை; களிப்பு; துன்பம்; சேறு.
**தொய்யில்** - மகளிர் மேலிடு சந்தனக்கோலம் ; அழகு; உழுநிலம்; தொயில்.
**தொலை** - அழிவு ; தூரம் ; ஒப்பு.
**தொலைதல்** - அழிதல் ; கழிதல்; சோர்தல; நீங்குதல்.
**தொல்** - பழைய ; இயற்கையான.
**தொல்வரவு** - பழங்குடியொழுககம்.
**தொழிதல்** - சிதறுதல்.
**தொழித்தல்** - கோபித்தல் ; ஒலிததல்; சிதறச் செய்தல்.
**தொழு** - மாட்டுககொட்டில்; இல்வாழ்க்கை ; கூட்டம் ; சிறை.
**தொழுதி** - கூட்டம்; திரட்சி.
**தொழுத்தை** - பணிப்பெண் ; அடிமை.
**தொழும்பன்** - அடியவன் ; இழிஞன்.
**தொழுவர்**-உழவர்; தொழில் செய்வோர்.
**தொழுனை** - யமுனை யாறு.
**தொளி** - சேறு; வீதி.
**தொள்கு** - வலை ; சேறு ; பள்ளம்.
**தொள்ளம்**-தெப்பம்; சேறு.
**தொள்ளி** - சேறு.
**தொள்ளுதல்** - துளைத்தல.
**தொள்ளை** - துளை ; குழி; குற்றம்; அறியாமை; மரககலம.
**தொறு**-பசுக்கூட்டம்; இடைச்சாதி ; கூட்டம ; தொழு ; (ஓரிடைச்சொல்).

**தொற்றுதல்** - பற்றுதல்; தொடர்தல்.

**தொனித்தல்** - ஒலித்தல்; குறிப்புப் பொருள் தோன்றுதல்.

**தொன்மரம்** - ஆலமரம்.

**தொன்மை** - பழமை.

**தொன்று** - பழமை; கீழ்.

## தோ

**தோகம்** - துக்கம்; பால்; சிறுமை.

**தோகை** - மயிற்பீலி; மயிர்; மயில்; வால்; பெண்; ஆடை; கொய்சகம்.

**தோக்கை** - கொய்சகம்; தோகை; சீலை; மேற போர்வை.

**தோடகம்** - தாமரை; கொப்புளம்.

**தோடு** - ஓலை; காதணி; பூவிதழ்; தொகுதி; பறவைக்கூட்டம்.

**தோட்கோப்பு** - கட்டுச் சோறு.

**தோட்டி** - ஆணை; கதவு; காவல்; கட்டமுகு; அங்குசம்; வெட்டியான்.

**தோணி** - நீர்; ஓடம்; கப்பல்; நீர்த்தொட்டி; அம்பு; மதிலுறுப்பு; சேறு.

**தோணுக்கம்** - மகளிர் விளையாட்டுவகை.

**தோண்டான்** - ஓநாய்.

**தோண்மை** - புயவலி.

**தோதகம்** - வருத்தம்; வஞ்சகம்; சாலவித்தை; ஒழுக்கமின்மை.

**தோப்பி** - நெல்லாற் சமைத்த கள்.

**தோமரம்** - தண்டாயுதம்; கைவேல்; வாச்சியம்.

**தோம்** - குற்றம்; துன்பம்; தீமை.

**தோயதரம்** - மேகம்.

**தோயதி** - கடல்.

**தோயம்** - நீர்; கடல்.

**தோய்தல்** - முழுகுதல்; நனைதல்; உறைதல்; படிதல்; செறிதல்; பொருந்துதல்; அணைதல்; முகத்தல்; கலத்தல்; கிட்டுதல்; ஒத்தல்.

**தோய்த்தல்** - நனைத்தல்; துவைசசலிடுதல்; சாய மேற்றுதல; துவைத்தல்.

**தோய்ந்தார்** - நட்பினர்.

**தோரணம்** - தொங்கல்; அலங்கார வாயில்; குரங்கு; யானை நடை.

**தோரணை** - முறை.

**தோரியம்** - கூத்து.

**தோரை** - மலைநெல்; மூங்கிலரிசி; இரத்தம்; பீலி விசிறி.

**தோல்** - தோல்வி; தோல்; புறணி; கேடகம்; மரப்பட்டை; துருத்தி; விழுமிய பொருள் தரும்மெல்லென்ற சொல்; பக்கரை; அழகு; யானை; புகழ்.

**தோழமை** - நட்பு.

**தோழம்** - தொழுவம்; கடல்; பேரெண்.

**தோழ்** - தொழுவம்.

**தோளுதல்** - துளைத்தல்; தோண்டுதல்.

**தோற்செவி** - புறச்செவி.

தோற்பரம் - தோள்கேடகம்.
தோற்றம் - காட்சி; உயர்ச்சி; உற்பத்தி; தன்மை.
தோற்றுவாய் - தொடக்கம்.
தோன்றல் - தலைவன்; மகன்; அரசன்; உயர்ச்சி; காட்சி; உற்பத்தி.
தோன்றி - செங்காந்தள்; ஒருமலை; கார்த்திகைப்பூ; இரத்தம்.
தோஷம் - பாவம்; நாடிக் கொதிப்பு; தீங்கு; குற்றம்.

## தௌ

தௌகித்திரன் - மகளுக்கு மகன்.
தௌரிதகம் - குதிரை நடை.
தௌர்ப்பல்லியம் - பல வீனம்.
தௌர்ப்பாக்கியம் - துர திர்ஷ்டம்.
தௌவல் - கெடுதல்; தடை; நடத்தல்.
தௌவாரிகன் - துவார பால கன்; வாயில்காப்போன்.
தௌவை - தவவை.

## ந

ந - (சிறப்பு; மிகுதி; எதிர் மறைப் பொருள்களை யுணர்த்தும் ஓர் இடைச் சொல்).
நகம் - விரல் நகம்; பங்கு; மலை; பூமி.
நகர் - வீடு; கோயில்; நகரம்; அரண்மனை மருதநிலத் தூர்; மனைவி.
நகல் - சிரிக்கை; நட்பு; ஒளி; பிரதி.

**நகழ்தல்** - துன்பப்படுதல்; நகர்ந்து செல்லுதல்.
**நகில்,**
**நகிலம்** - முலை.
**நகுதல்** - சிரித்தல்; மலர்தல்; பரிகசித்தல்; தாழ்த்துதல்.
**நகுலம்** - கீரி.
**நகை** - சிரிப்பு; இன்பம்; பல்; அவமதிப்பு; நட்பு; மலர்; ஒளி; முத்து; அணி.
**நகைவர்** - நட்பினர்.
**நக்கம்** - அம்மணம்.
**நக்கரம்** - முதலை.
**நக்கரித்தல்** - நகர்ந்து செல்லுதல்; தவழ்தல்; படுகிடையாதல்.
**நங்கூரம்** - கப்பலை நிறுத்திவைக்கும் கருவி.
**நங்கை** - சிறந்த பெண்.
**நசிதல்** - அழிதல்; குறைதல்.
**நசியம்** - மூக்கிலிடு மருந்து.
**நசை** - அன்பு; ஆசை; விருப்பம்; குற்றம்.
**நசைதல்** - விரும்புதல்; அன்பு செய்தல்.
**நச்சு** - விருப்பம்; தொந்தரை; சிறுமை; நஞ்சு.
**நஞ்சு** - விஷம்; கொப்பூழ்க்கொடி.
**நடப்பு** - நடத்தை; போக்குவரவு.
**நடம்** - கூத்து.
**நடலம்** - செருக்கு; பாசாங்கு; வீண்செலவிடுகை.
**நடலை** - வஞ்சனை; பொய்ம்மை; துன்பம் அசைவு.
**நடவு** - நடுகை; நட்டபயிர்.
**நடவுதல்** - செலுத்துதல்; நடத்துதல்.

**நடவை** - வழி; உபாயம்; வழங்குமிடம்; கடவை மரம்.
**நடனம்** - கூத்து; பாசாங்கு.
**நடு** - மையம்; இடுப்பு; நீதி; நடுநிலை.
**நடுகல்** - வீரரைப் புதைத்த இடத்தில் நடும் கல்.
**நடுவன்** - மத்தியஸ்தன்; இயமன்.
**நடேசன்** - சிவன்.
**நடை** - நடத்தல்; இடைகழி; ஒழுக்கம்; மொழிப்போக்கு; வழக்கு.
**நடைபாவி** - படிக்கிணறு.
**நடைப்பரிகாரம்** - வாழ்க்கைக்குவேண்டிய பண்டங்கள்.
**நடைப்பிணம்** - பயனற்றவன்.
**நடைமலை** - யானை.
**நட்டார்** - நண்பர்.
**நட்டுவம்** - நாட்டியம் பயிற்றுந்தொழில்.
**நணி** - அணிகை.
**நணுகுதல்** - கிட்டிவருதல்; ஒன்றிக் கலத்தல்.
**நண்ணார்** - பகைவர்.
**நண்ணுதல்** - கிட்டுதல்; பொருந்துதல்; செய்தல்.
**நண்பகல்** - நடுப்பகல்.
**நண்பல்** - இருபற்களினிடை.
**நண்பு** - நட்பு; அன்பு.
**நண்மை** - சமீபம்.
**நதம்**-மேற்கு நோக்கியோடும் ஆறு.
**நதி** - யாறு; வணக்கம்.
**நதுத்தல்** - அவித்தல்; கெடுத்தல்; மறைத்தல்.

**நத்தம்** - ஆக்கம்; ஊர்; வாழை; சங்கு; இரவு.
**நத்துதல்** - விரும்புதல்; அண்டுதல்.
**நந்தவனம்** - பூந்தோட்டம்.
**நந்தனம்** - நந்தன வனம்; நத்தை; தவளை.
**நந்தன்** - இடையன்; திருமால்; புத்திரன.
**நந்தாவனம்** - நந்தவனம்.
**நந்தி** - சிவகணத்தலைவன்; இடபம்; சமணர் பட்டப்பெயர்; பேரிகை.
**நந்தினி** - மகள்.
**நந்து** - ஆக்கம்; சங்கு; பறவை.
**நந்துதல்** - கெடுதல்; அவிதல்: குறைதல்; மறைதல்; வளர்தல; தழைத்தல்; விளங்குதல்; செருக்குதல்; தூண்டுதல்.
**நந்துருணி** - புறங்கூறுவோன்; அறிவிலி.
**நந்தை** - கபிலைப்பசு; கலப்பைக் கயிறு.
**நபனம்** - திருமஞ்சனம்.
**நபி** - முகம்மது; தீர்க்கதரிசி.
**நபுஞ்சகம்** - பேடித்தன்மை.
**நமகம்** - உருத்திர மந்திரம்.
**நமசிவாய** - பஞ்சாட்சரம்.
**நமலுதல்** - வணங்கல்.
**நமன்** - இயமன்; நம்மவன்.
**நமித்திரர்** - பகைவர்.
**நமுகுதல்** - குழைதல்.
**நமை** - தினவு; ஒரு மரம்.
**நமைத்தல்** - சூட்டுதல்; வருந்துதல்.
**நம்பன்** - கடவுள்; சிவன்.
**நம்பி** - சிறந்த மகன்.

**நம்பு** - நசை; நாவல்.
**நயத்தல்** - விரும்புதல்; அன்பு செய்தல்; மலிதல்; நீதி செய்தல்.
**நயப்பு** - பற்று; ஆசைப்படு.
**நயம்** - அருள்; விருப்பம்; நன்மை; மகிழ்ச்சி; அன்பு; உபசாரம; மலிவு; நீதி.
**நயனம்** - கண்.
**நயன்** - நயம்; அன்பு; பசை; உபாயம்.
**நரகம்** - பாதாளம்.
**நரந்தம்**-கத்தூரி; நாரத்தை; ஒரு புல்.
**நரபதி** - அரசன்.
**நரலுதல்** - ஒலித்தல்; கத்து தல.
**நரலை** - கடல்; மதிலுறுப்புக் களிலொன்று; ஒலி.
**நரன்**-மனிதன; அருச்சுனன்.
**நரிதல்** - வருந்துதல்.
**நரித்தல்**-சிந்தித்தல்; வருத்து தல்; நொறுக்குதல்; கெடுத் தல.
**நருக்குதல்** - நொறுக்குதல்; கொல்லுதல்; துண்டாக்கு தல்.
**நருங்குதல்** - நொறுங்குதல்; தேயகடையாதல்.
**நரை** - வெண்மயிர்; எருது; மூப்பு; வெண்மை; பெருமை; மரச்சொத்தை.
**நர்த்தனம்** - கூத்து.
**நலக்குதல்** - கசங்கச்செய்தல்; அமுக்காக்குதல்.
**நலங்குதல்** - நொந்து போதல்; வருந்துதல; நுடங்குதல்,

**நலத்தல்** - நலமாதல்; விரும்புதல்.
**நலம்** - நன்மை; உயர்வு; சுகவாழ்வு; சிவப்பு; விருபபம்; அழகு; அனபு; இன்பம்; குணம; புகழ்.
**நலம்பாடு** - இன்பம்.
**நலவர்** - நலலோர்.
**நலிதல்** - மெலிதல்; அழிதல்; வருந்துதல்; நோயடைதல்.
**நல்குதல்** - விரும்புதல்; கொடுத்தல்; தலையளி செயதல்; படைத்தல; வளர்த்தல்; தாமதித்தல்; பயன்படுதல்.
**நல்குரவு** - வறுமை.
**நல்கூர்தல்** - வறுமையடைதல்; துனபுறுதல.
**நல்ல** - நனமையான; அதிகமான; கடுமையான.
**நல்லார்** - பெரியோர்; மகளிர்.
**நல்லிளம்படியார்** - அழகிய இளம பெண்கள்.
**நல்லேறு** - இடபம்; எருமை.
**நவநீதம்** - வெணணெய்.
**நவம்** - புதுமை; ஒன்பது; நட்பு; பூமி.
**நவியம்** - கோடரி; மழு; புதுமை.
**நவிரம்** - புன்மை; ஆண்மயிர்; வாள்; மயில்.
**நவிலுதல்** - சொலலுதல்; கறறல்; பழகுதல்; தாங்குதல்; குறித்தல்.
**நவிழ்த்தல்** - அவித்தல்.
**நவீனம்** - புதுமை.
**நவை** - குறறம்; தண்டனை; இகழச்சி.
**நவைத்தல்** - கொல்லுதல்.

**நவ்வி** - பெண்மான்; மான்குட்டி; அழகு; மரக்கலம்.
**நளி** - செறிவு; சேர்க்கை; பெருமை; அகலம்; தேள்.
**நளிதல்** - செறிதல்; பரத்தல்; ஒத்தல்.
**நளிர்** - குளிர்ச்சி; நண்டு; பகை.
**நளினம்** - தாமரை; நயச்சொல்.
**நள்** - நடு; இரவு.
**நள்ளுதல்** - நட்புக்கொள்ளுதல்; செறிதல்; விரும்புதல்.
**நள்ளிருணாறி** - இருவாட்சிப்பூ.
**நறவம்** - தேன்; பால்; மணம்.
**நறவு** - ஒருவகை மலர்; மது.
**நறு** - தேன்; கள்.
**நறுக்கு** - துண்டு; சீட்டு.
**நறுக்குதல்** - நொறுக்குதல்; துண்டித்தல்; வெட்டுதல்.
**நறுங்காழ்** - அகில் சந்தன முதலியன.
**நறுமை** - நன்மை; மணம்.
**நறை** - தூபம்; மணம்; தேன்; பசிலைக்கொடி; சாதிக்காய்; குற்றம்.
**நற்கு** - நன்கு.
**நற்றம்** - நற்குணம்.
**நற்றாய்** - பெற்ற தாய்.
**நற்றிறம்** - நீதிநெறி; நோன்பு.
**நற்று** - நன்மை.
**நனந்தலை** - அகன்றவிடம்; திசை.
**நனம்** - அகற்சி.
**நனவு** - சாக்கிரம்; தோற்றம்; பகல்; மெய்ம்மை; விழிப்பு.

**நனி** - மிக்க.
**நனை** - அரும்பு; தேன்; கள்.
**நன்கனம்** - நனருக.
**நன்காடு** - சுடுகாடு.
**நன்பகலந்தி** - உச்சிக்காலம்.
**நன்மை** - நலம; பயன்; ஆசி; மேம்பாடு; அழகு.
**நன்றி** - உபகாரம; அறம்.
**நன்று** - ஆககம; நற்குணம்; நலவினை.
**நன்னர்** - நன்மை.
**நன்னி** - சிறியது.

## நா

**நா** - நாக்கு; பேச்சு; நடு; பொலிவு.
**நாகம்** - வான்; மேகம்; நல்ல பாமபு; நாகலோகம்; யானை; நாவல்; புன்னை; மலை; துத்தநாகம்; குரங்கு.
**நாகரம்** - வடமொழி யெழுத்து.
**நாகரிகம்** - நகரவொழுக்கம்; மரியாதை; கண்ணோட்டம்.
**நாகர்** - தேவர்; நாகலோகத்தார்.
**நாகாலயம்** - பாதலம; தேவர்களிருப்பிடம்.
**நாகு** - இளமை; எருமை பசு முதலியவற்றின் பெண் கன்று; நத்தை; புற்று.
**நாங்கூழ்** - நாக்குப்பூச்சி.
**நாசம்** - அழிவு.
**நாசி** - மூக்கு; மாளிகை; மேனிலையுறுப்பு.
**நாச்சி** - தலைவி.
**நாச்செறு** - வசை.
**நாஞ்சில்** - கலப்பை; மதிலுறுப்பு.

நாடகம் - கதை; நடிப்பு; நாடகத்தமிழ்.
நாடி - தாது; இரத்தக் குழாய்; மாளிகை மேலுறுப்பு; நாழிகை.
நாடுதல் - தேடுதல்; விரும்புதல; தெரிதல்; அளத்தல.
நாட்காலம் - விடியற்காலம்; ஏறற பருவம்.
நாட்கூறு - முற்பகல்.
நாட்சோறு - காலையுணவு.
நாட்டம் - கண்; பார்வை; நோக்கம்; அழகு; சஞ்சாரம்; விருப்பம; வாள்; சோதிட நூல்.
நாட்டாண்மை - ஊர திகாரம்.
நாணயம் - முத்திரைக காசு; நேர்மை; குறிததது தவறுமை.
நாணி - வில்நாண்.
நாணிழல் - காலைநிழல்.
நாண் - வெட்கம்; கயிறு.
நாண்மகிழிருக்கை - திருவோலககம.
நாண்மலர் - அன்றலர்ந்த பூ.
நாண்மீன் - நட்சத்திரம்.
நாதம் - ஓசை; இசை; அரைவட்டமான பிரணவ எழுத்து; சிவ தத்துவம்.
நாதன் - தலைவன்; கணவன்; ஆசிரியன்; கடவுள்.
நாத்தி - இன்மை; நாசம்; கணவனுடன் பிறந்தவள்.
நாத்திகம் - கடவுளில்லையெனனுங் கொள்கை.
நாந்தகம் - வாள்.
நாந்தல் - மந்தாரம்; ஈரம.
நாந்துதல் - நனைதல்.

**நாந்தி** - முன்னுரை; வாழ்த்து.
**நாபி** - கொப்பூழ்; கத்தூரி.
**நாப்பண்** - நடு.
**நாப்பு** - பரிகாசம.
**நாமகரணம்** - பெயரிடுஞ் சடங்கு.
**நாமகள்** - கலைமகள்.
**நாமடந்தை** - நாமகள்.
**நாமதேயம்** - பெயர்.
**நாமநீர்** - கடல்.
**நாமம்** - அச்சம். பேர்; புகழ்; திருமண்.
**நாமயம்** - தற்போதம்.
**நாமறுதல்** - முற்றுமழிதல்.
**நாமாவளி** - பெயர் வரிசை.
**நாம்** - அச்சம்.
**நாம்பு** - மெலிவு.
**நாயகமணி** - நடுமணி.
**நாயகம்** - தலைமை; சிவப்பு.
**நாயகன்** - தலைவன்; கணவன்; தந்தை.
**நாயக்கன்** - ஒரு சாதியான்; சேனை உத்தியோகத்தன்.
**நாயன்மார்** - கடவுளர்; கடவுட்டன்மையர்.
**நாய்கன்**-வணிகன்; தலைவன்.
**நாய்ச்சி** - தலைவி.
**நாரணன்** - திருமால,
**நாரம்** - நீர்; பாசி; அன்பு.
**நாரன்** - மன்மதன்.
**நாராசம்** - இருப்புச்சலாகை.
**நாராயணி** - துர்க்கை; பார்வதி.
**நாராயம்** - அம்பு.
**நாரி** - நாணி; பார்வதி; பெண்; தேன்; சேனை.
**நாரிகேளம்** - தென்னை; தேங்காய்.

நாரிகை - பெண்.
நார் - கயிறு ; அன்பு ; நூல் ; பன்னாடை.
நாலுதல்-தொங்குதல்; கழுத்திற் சுருக்கிட்டுக் கொள்ளுதல்.
நாவலர் - புலவர்; அமைச்சர்.
நாவல் - ஒரு மரம்; நாவலந்தீவு; வெற்றியொலி; துக்கக் குறிப்பு.
நாவாய் - கப்பல்; நாவாய்ப் பறை.
நாவி - கத்தூரி; கத்தூரி மிருகம்; புழுகுப்பூனை; கொப்பூழ்; மயிர்ச்சாந்து; நாவாய.
நாவிகன் - கப்பலோட்டி.
நாவிதன் - அம்பட்டன்.
நாவுதல் - நாவளைத்தல்; நாப்புக்காட்டுதல்.
நாவை - கொழுநனி.
நாழி - படியளவு ; நானாழி ; அம்பறுத்தூணி ; ஏர் நாழி ; நேர அளவு; நாடா.
நாழிகைவட்டம் - கடிகாரம்.
நாழ் - குற்றம்; செருக்கு.
நாளங்காடி - பகற்கடை.
நாளடைவில் - செல்லச் செல்ல.
நாளந்தி - சிறுகாலை.
நாளம் - தண்டு ; உட்டுளை.
நாளார் - இயமன்.
நாளிருக்கை-நாளோலக்கம்.
நாளோலை - முகூர்த்த ஓலை.
நாள் - காலம்; பகல்; நட்சத்திரம்.
நாறுதல் - மணத்தல்; முளைத்தல்; பிறத்தல்; தோன்றுதல்.

**நாற்றம்** - மணம்; புலனறிவு; தோற்றம்.
**நாற்றி** - நான்மடங்கு.
**நானம்** - கத்தூரி; புழுகு; கவரிமான்.
**நானிலம்** - பூமி.
**நான்மாடக்கூடல்** - மதுரை.
**நான்முகன்** - பிரமன்; அருகன்.

## நி

**நி** - (இன்மை; அன்மை; அதிகம; சமீபம்; பூரணம். நிச்சயம்; ஐயம; வன்மை; விருப்பம் முதலிய பொருளுணர்த்தும் ஒரு வடமொழி இடைச்சொல்.)
**நிகண்டு** - தமிழ்ச்சொல் அகராதி.
**நிகமம்** - முடிவு; நெடுந்தெரு; கடைவீதி; வேதம்.
**நிகரம்** - கூட்டம்; மொத்தம்; கொடை; விழுங்குகை.
**நிகர்** - ஒப்புமை; சமானம; ஒளி; போர்.
**நிகழ்ச்சி** - சமபவம்; நிலைமை; காரியம்.
**நிகழ்தல்** - சம்பவித்தல்; நடந்துவருதல்; செல்லுதல்; தங்குதல்; நிறைவேறுதல்; விளங்குதல்.
**நிகழ்த்துதல்** - நடப்பித்தல்; சொல்லுதல்.
**நிகளம்** - விலங்கு; பந்தம்; யானைக்காற் சங்கிலி.
**நிகாதம்** - நரகம்.
**நிகாயம்** - கூட்டம்.
**நிகிலம்** - எல்லாம்.

**நிகேதனம்** - வீடு; கோயில்; நகரம்.
**நிக்கந்தன்** - அருகன்.
**நிக்கிரகம்** - அழிக்கை; தண்டனை.
**நிசாசரன்** - அசுரன்; சந்திரன்.
**நிசாரி** - சூரியன்.
**நிசாளம்** - ஒரு கட்பறை.
**நிசான்** - கொடி.
**நிசி** - இரவு; பொன்.
**நிசிதம்** - கூர்மை; இகழ்ச்சி; இரும்பு.
**நிசிந்தன்** - ஈசன்.
**நிச்சம்** - நிச்சயம்; எப்பொழுதும்.
**நிச்சயம்** - உறுதி; துணிவு.
**நிச்சுவாசம்** - மூச்சடக்குகை; மூச்சு வெளிவிடுகை.
**நிட்களம்** - உருவமில்லாதது; தூய்மை.
**நிணம்** - கொழுப்பு; மாமிசம்.
**நிணர்தல்** - கட்டுதல்; செறிதல்.
**நிணவை** - பின்னல்; பிணிப்பு.
**நிணறு** - இதம்; உருக்கம.
**நிதம்** - தினமும்.
**நிதரிசனம்** - திருட்டாந்தம்.
**நிதனம்** - நாசம; வறுமை.
**நிதானம்** - மூலகாரணம்; பொன்; இரத்தினம்; படை; நிர்மானம்; உத்தேசம்; நேர்மை; சாவதானம்.
**நிதி** - பொற்றிரள்; பொன்.
**நிதித்தியாசனம்** - இடைவிடாத் தியானம்.

**நித்தம்** - அழியா நிலை; நித்திய கருமம்; நடனம்.
**நித்தியம்** - என்றுமுண்மை; கடல்; நாடோறும்.
**நித்திரை** - தூக்கம்.
**நித்திலம்** - முத்து.
**நிந்தாஸ்துதி** - இகழ்தல் போலப் புகழ்கை.
**நிந்தை** - இகழ்ச்சி.
**நிபந்தனை** - ஏற்பாடு; கட்டுப்பாடு; பொதுவிதி; தண்டனை.
**நிபம்** - காரணம; கோள்; வஞ்சனை.
**நிபாதம்** - இறங்குகை; செயலொழிகை.
**நிபிடம்** - நெருக்கம.
**நிபுணம்** - முழுச்சமர்த்து; தேர்ச்சி.
**நிமலம்** - மாசின்மை.
**நிமிடுதல்** - நெருடுதல்.
**நிமிண்டுதல்** - கசக்குதல்; கிள்ளுதல்.
**நிமிதல்** - வாய்நெளிதல்.
**நிமித்தம்** - காரணம; சகுனம்; அடையாளம்.
**நிமித்திகர்** - சோதிடர்; குறிசொல்வோர்.
**நிமிர்தல்** - உயர்தல்; நீளுதல்; பரத்தல்; நுடங்குதல; மிகுதல்; நெருங்குதல்; முயலுதல்; இறுமாத்தல.
**நிமை** - இமை.
**நிம்பம்** - வேம்பு.
**நிம்பன்** - பாண்டியன.
**நிம்பிரி** - பொறாமை.
**நிம்மதி** - மனவமைதி.
**நியதி** - செய்கடன்; முறைமை; ஊழ்; வரையறை.

**நியமம்** - நியதி; நகரம்; கோயில்; கடைத்தெரு; வீதி; மண்டபம்.
**நியமனம்** - கட்டளை; வகைப் படுத்துகை; அமைவு.
**நியர்** - ஒளி.
**நியாயம்** - நீதி; வாய்மை; சட்டம்; முகாந்தரம்; வாக்குவாதம்; கட்டுப்பாடு.
**நிரஞ்சனம்** - குற்றமில்லாதது.
**நிரட்சம்** - பூமத்தியரேகை.
**நிரதம்** - எப்பொழுதும்.
**நிரதிசயம்** - ஒப்புயர்வில்லா மேன்மை.
**நிரத்தல்** - பரத்தல்; நிரம்புதல்; கலத்தல்; ஒழுங்கு செய்தல்; சமாதானப்படுதல்.
**நிரந்தரம்** - இடைவிடாமை; சராசரி; நெருக்கம்; அழிவு; குரங்கு.
**நிரபராதி**-குற்றமற்றவன்.
**நிரப்பு** - நிறைவு; வறுமை.
**நிரம்புதல்** - நிறைதல்; மிகுதல.
**நிரயம்** - நரகம்.
**நிரலுதல்** - ஒழுங்குபடுதல்.
**நிரல்** - வரிசை; ஒப்பு.
**நிரவுதல்** - சமனுதல்; குறை தீர்த்தல்; பரவுதல்; அழித்தல்.
**நிரனிறை**-நிறுத்த முறையே பொருள் கொள்ளல்.
**நிராகரணம்** - மறுப்பு.
**நிராகிருதி** - வடிவின்மை.
**நிராமயம்** - நோயின்மை.
**நிராலம்பம்** - பற்றுக்கோடின்மை.

**நிரியாணம்** - மரணம்; யானைக் கடைக்கண்.
**நிருதர்** - அரக்கர்.
**நிருத்தம்** - நடனம்; பற்றின்மை.
**நிருபம்** - கடிதம்; கட்டளை.
**நிருமித்தல்** - படைத்தல்; ஏற்படுத்துதல்.
**நிரூபணம்** - ஆராய்ச்சி.
**நிரை** - வரிசை; ஒழுங்கு; பசுக்கூட்டம்.
**நிரைச்சல்** - மறைப்பு; இரவல்; படைவகுப்பு.
**நிரைதல்** - நிரப்புதல்; ஒழுங்காக்குதல்; முடைதல்.
**நிரைத்தல்** - நிரப்புதல; கோத்தல்; பரப்புதல்; ஒலித்தல்; திரளுதல்.
**நிர்த்தூளி** - முழுக்கேடு.
**நிர்ப்பந்தம்** - பலவந்தம்.
**நிர்மாலியம்** - பூசித்துக கழித்த பொருள்.
**நிர்மூலம்** - முழுக்கேடு.
**நிர்வாகம்** - பொறுப்பு; பராமரிப்பு.
**நிர்வாணம்** - முத்தி நிலை; அம்மணம்.
**நிலமகள்** - பூமிதேவி.
**நிலயம்** - தங்குமிடம்; கோயில்; மருதநிலத்தூர்; படி; கூத்து.
**நிலவறை** - பூமி உள்ளறை.
**நிலவுதல்** - நிலைத்திருத்தல்; வழங்குதல்; ஒளிவிடுதல்.
**நிலாமுகி** - சகோரப்புள்.
**நிலைத்திணை** - அசையாப பொருள்; அசரம்.
**நிலையுதல்** - நிலை பெறுகை.

**நிலைவரம்** - நிலைபேறு; நிச்சயம்; நிலைமை.
**நிவத்தல்** - உயர்தல்; படர்தல; மேல்வழிதல; தோன்றுதல.
**நிவர்த்தி**-விடுதலை; போக்கு.
**நிவாசம்** - வாழிடம்.
**நிவாரணம்** - ஒழிக்கை; தடை.
**நிவேதனம்** - ஒப்புவித்தல்; தேவருணவு.
**நிழத்துதல்** - ஓய்தல்; இல்லையாக்குதல்.
**நிழல்** - ஒளி.
**நிழற்றுதல்** - நிழல் செய்தல்; அருள்காட்டல; ஒளிவிடுதல.
**நிறத்தல்** - நிறம்பிடித்தல்; சோபித்தல்; பயனளித்தல்.
**நிறம்** - இயல்பு; ஒளி; மார்பு; உயிர்நிலை; நடுவிடம்; உடல்; தோல; வர்ணம்.
**நிறுதிட்டம்** - நேர்நிறகை; விறைப்பு.
**நிறுவுதல்** - நிலைநிறுத்துதல்.
**நிறை** - மாட்சிமை; அளவு; நிறுத்துகை; கறபு; திண்மை; நீதி; சால.
**நிறைமொழி** - தவருசசொல்; மந்திரம.
**நினைவு** - ஆலோசனை; வருத்தம.
**நின்மலம்** - மாசின்மை.
**நின்மிதி** - உண்டாக்குகை; தொடக்கம.
**நிஷ்களம்** - உருவமின்மை.
**நிஷ்டை** - தியானம.
**நிஷாதன்** - வேடன்.

**நிஷித்தம்** - விலக்கப்பட்டது.
**நிஷேதம்** - விலக்கு.
**நிஷேபம்** - புதைபொருள்.

## நீ

**நீகாரம்** - பனி; அவமதிப்பு.
**நீகான்** - மாலுமி.
**நீசம்** - இழிவு; தாழ்வு.
**நீச்சு** - நீந்துகை; மீன கவிச்சு.
**நீடம்** - பறவைக்கூடு.
**நீடுதல்** - நீளுதல்; பரத்தல்; தாமதித்தல்; கெடுதல்; நிலைத்தல்.
**நீட்டம்** - நீட்டுகை; நீளம்.
**நீட்டித்தல்** - நீளச்செய்தல; காலந்தாழ்த்துதல்.
**நீட்டுதல்** - நீளச்செய்தல்; கொடுத்தல்.
**நீண்டவன்** - திருமால்.
**நீதம்** - நீதி; தகுதி.
**நீதி** - முறைமை; ஒழுக்கம்; தருமம்; மெய்.
**நீத்தம்** - வெள்ளம்; ஆழம்; கடல்; மிகுதி.
**நீத்தல்** - பிரிதல்; துறத்தல்; தள்ளுதல்; வெறுத்தல்.
**நீத்து** - நீந்தத்தகக ஆழம்; வெள்ளம்.
**நீபம்** - கடப்பமரம்; காரணம்.
**நீயம்** - ஒளி.
**நீயான்** - மாலுமி.
**நீரகம்** - கடல் சூழ்ந்த இடம்; பூமி.
**நீரணி** - நீர் விளையாட்டுக் கோலம்.
**நீரதம்** - நீரின்மை; மேகம்.

**நீரரமகள்** - நீர்வாழ் தெய்வப் பெண்.
**நீராஞ்சனம்** - மஞ்சள் நீர் ஆரத்தி.
**நீராளம்** - நீர்த்தன்மை; நீர் மிகுதி.
**நீர்** - கடல்; ஒளி; குணம்; முறை.
**நீர்த்தல்** - நீராதல்; ஈரமா தல.
**நீர்பிரிதல்** - கோபித்தல்.
**நீர்மை** - நீரின தனமை; தன்மை; சிறந்த குணம்; ஒளி.
**நீலகண்டன்** - சிவன்.
**நீலமேனியன்** - திருமால்.
**நீலாஞ்சனம்** - கறுப்புக்கல்; கல்லியம்.
**நீலி** - காளி; பார்வதி; துட்டை; கருநிறம்.
**நீலோற்பலம்** - கருங்குவளை.
**நீவாரம்** - வனநெல்; குள நெல.
**நீவி** - கொய்சகம்; ஆடை
**நீவியம்** - சேலை.
**நீவுதல்** - நீக்குதல்; கடத்தல்; அறுத்தல்; அழித்தல; பூசு தல; தடவிக்கொடுத்தல்; கோதுதல்; பரப்புதல்.
**நீளம்** - பறவைக்கூடு.
**நீள்** - நீளம்; நெடுங்காலம; நெடுமை; தூரம்.
**நீறு** - சாமபல்; விபூதி; புழுதி; நீற்றின சுண்ணாம்பு.
**நீற்றறை** - சுண்ணாம்புக் காள வாய்.
**நீற்றுதல்** - நீறுக்குதல்.

## நு

**நுகம்** - நுகத்தடி ; பாரம் ; நடுவுநிலைமை ; வலிமை ; கதவின் கணையமரம்.
**நுகர்தல்** - அனுபவித்தல் ; அருந்துதல்; செய்தல்.
**நுகும்பு** - குருத்து; ஓலை.
**நுகைதல்** - தளர்தல் ; இளகுதல்.
**நுகைத்தல்** - இளகச் செய்தல்.
**நுகைவு** - இளக்கம்; தளர்வு; பொருளுதவி.
**நுங்குதல்** - விழுங்குதல்; ஆரப் பருகுதல் ; உண்ணுதல்; கைக்கொள்ளுதல்.
**நுங்கை** - உன் தங்கை; உன் தாய்.
**நுசுப்பு** - பெண்களின் இடை.
**நுடக்குதல்** - கழுவுதல் ; துவட்டுதல் ; மாய்த்தல் ; கரைத்தல ; மடக்குதல்.
**நுடங்குதல்** - துவளுதல ; அடங்குதல்; அசைதல்.
**நுணங்கு** - நுண்மை; தேமல்.
**நுணங்குதல்** - அசைதல் ; நுட்பமாதல் ; வாடுதல்; வளைதல்; செறிதல்.
**நுணல்** - தவளை.
**நுணுவுதல்** - தடவித் தெரிதல்; நாவால் தடவி யுணர்தல்.
**நுணித்தல்** - கூர்மையாக்குதல் ; பொடியாக்குதல் ; நுணுகி ஆராய்தல்.
**நுணுகுதல்** - நுட்பமாதல் ; கூர்மையாதல்.
**நுதலுதல்** - தோற்றுவித்தல்; கூறுதல்; கருதுதல்.

**நுதல்** - நெற்றி; மேலிடம்; புருவம்; தலை.
**நுதனுட்டி** - துர்க்கை.
**நுதி** - நுனி; கூர்மை.
**நுதித்தல்** - அவித்தல்; அழித்தல்; நீக்குதல்.
**நுந்துதல்** - தள்ளுதல்; தூண்டுதல்.
**நுவணை** - நுட்பம்; இடிமா; கல்வி நூல்.
**நுவலுதல்** - சொல்லுதல்; விரும்புதல்.
**நுவறுதல்** - அராவுதல்.
**நுவ்வை** - நும தங்கை.
**நுழுந்துதல்** - நுழைத்தல்; பதுங்கல்; முடித்தல்.
**நுழை** - சிறுவழி; குகை.
**நுழைபுலம்** - நுண்ணறிவு.
**நுளம்பு** - கொசுகு.
**நுளையர்** - வலைஞர்; ஈனர்.
**நுறுங்கு** - குறுணி.
**நுனித்தல்** - கூர்ந்துநோக்குதல்; கூராக்குதல.
**நுனை** - முனை.

## நூ

**நூ** - எள்; யானை; ஆபரணம்.
**நூக்குதல்** - பொடியாக்குதல்; தள்ளுதல்; ஊசலாடுதல; தூண்டுதல்; சாத்துதல்; எறிதல்.
**நூங்கு** - பெருமை; மிகுதி.
**நூதனம்** - புதுமை.
**நூபுரம்** - சிலம்பு.
**நூலாக்கலிங்கம்** - பட்டாடை.
**நூல்** - பஞ்சிநூல்; தாலி; ஆகமம்; ஆலோசனை; கல்வி.

**நூல்வெண்மாடம்** - கூடாரம்.
**நூழில்** - கொன்று குவிக்கை; தொளை; ஒருகொடி; யானை; அலை; செக்கு.
**நூழை** - தொளை; சிறுவாயில்; குகை.
**நூறு** - சுண்ணும்பு; பொடி; ஓர் எண்.
**நூறுதல்** - அழித்தல்; வெட்டுதல்; அறைந்து கொலலுதல்; துரத்தல்; நெரித்தல்.
**நூனுழி** - நெசவுநாடா.
**நான்முகம்** - பாயிரம்.

## நெ

**நெகிடி** - நெருப்புக்குவை.
**நெகிழ்தல்** - கட்டுத் தளர்தல்; இளகுதல்; மனமிரங்குதல்.
**நெக்கு** - நெகிழ்சசி; உடைபடல்.
**நெஞ்சு** - மனம; இருதயம்; மார்பு; தொணடை.
**நெடி** - சின்வண்டு; காரநாற்றம.
**நெடித்தல்** - தாமதித்தல்.
**நெடியோன்** - திருமால்; பெரியோன்.
**நெடிலடி** - ஐந்து சீரால் அமைந்த செயயுள் அடி.
**நெடில்** - நெட்டெழுத்து; மூங்கில.
**நெடுங்கணக்கு** - அரிச்சுவடி; நெடுநாட் கணக்கு.
**நெடுங்கை** - யானை.
**நெடுஞ்சாண்கிடை** - தண்டாகாரமாய்த் தரையிற் கிடக்கை.

**நெடுநீர்** - கடல்; ஆழமாகிய நீர்; நீட்டித்துச் செய்யும் இயல்பு.
**நெடுமை** - நீட்சி; கொடுமை; ஆழம.
**நெடுமொழி** . புகழ்ச்சொல; வஞ்சினம்.
**நெடுவரி** - ஒழுங்கு.
**நெட்டாங்கம்** - செருக்கு; பழிப்பு.
**நெட்டாங்கு** - செங்குத்து.
**நெட்டிடை** - நெடுந்தூரம.
**நெட்டு** - நெடுந்தூரம்; செருக்கு.
**நெட்டுயிர்ப்பு** - பெருமூச்சு.
**நெட்டுரு** - மனப்பாடம.
**நெட்டெழுத்து** - நெடில்; கையெழுத்து.
**நெட்டை** - ஒருவகைக் கருவி.
**நெட்டோலை** - திருமுகம்.
**நெண்டுதல்** - நொண்டுதல்; தோண்டுதல.
**நெதி** - செல்வம்; முத்து; தியானம்.
**நெம்பு** - மேலெழும்புகை; மடலாணி; ஏணிப்பழு.
**நெய்** - தேன; உதிரம்; சிநேகம்.
**நெய்தல்** - வெள்ளாம்பல்; செங்கழுநீர்; கடல்சார் நிலம; இரங்கல்; சாப்பறை.
**நெய்த்தல்** - ஒளிர்தல்; கொழுத்தல்.
**நெய்த்தோர்** - இரத்தம்.
**நெய்யணி** - பிள்ளைப் பேறறின்பின் முதன்முழுக்கு.
**நெய்யரி** - பன்னாடை.
**நெரிதல்** - நொறுங்குதல்; வளைதல்; நெருங்குதல்.

நெரியல் - மிளகு.
நெருடு - கோணல்; வஞ்சனை; நிமிண்டுகை; தடவுகை.
நெருநல் - நேற்று.
நெறி - வளைவு; சுருள்; சமயம்; விதி; ஒழுக்கம்; வழி; கட்டி.
நெறித்தல் - வளைத்தல்; நிமிர்த்தல்.
நெறி நீர் - கடல்.
நெற்றி - கொண்டை.
நெற்று - உலர்ந்த பழம்; நெறிப்பு; மோதுகை.
நென்னல் - முன்னாள்.

## நே

நே - அன்பு; அருள்.
நேசம் - அன்பு; தகுதி.
நேடுதல் - தேடுதல்; எண்ணுதல.
நேதா - தலைவன்.
நேதி - முறை.
நேத்திரம்-கண்; பட்டாடை.
நேமகம் - நியமிக்கை; ஒழுங்கு; இருப்பிடம்.
நேமி - தேருருளை; வட்டம்; சக்கராயுதம்; பூமி.
நேயம் - நேசம்; பக்தி; நெய்; நன்மை.
நேரலன்-பகைவன்; நேர்மையானவன்.
நேரிசம் - எறிபடை; அம்பு வகை.
நேரிழை - பெண்.
நேர் - செவ்வை; நேர்மை; பாதி; வலிமை; ஊர்த்துவம்; (ஓர் உவம வுருபு).

நேர்தல் - உடன்படுதல்; பொருந்துதல்; எதிர்ப்படுதல்; பெறுதல்; கொடுத்தல்; சம்பவித்தல்; சொல்லுதல்.
நேர்த்தி - திருத்தம்; சிறப்பு; முயற்சி.
நேர்த்திக்கடன் - பிரார்த்தனை.
நேர்ந்தார் - நண்பர்.
நேர்மை - செம்மை; நீதி.

## நை

நை - இகழ்ச்சிக் குறிப்பு.
நைகரம் - வருத்தம்; குறைவு.
நைச்சியம் - நீசத்தன்மை; தாழ்மை.
நைதல் - நசுங்குதல்; குறைதல்; வருந்துதல்; இரங்குதல்.
நைத்தல் - நசுக்குதல்; எரித்தல்.
நைத்தியம் - நித்தியத்துவம்
நைமித்திகம் - விசேடபூசை.
நையல் - மெலியச் செய்யும் நோய்.
நையாண்டி - சிரிப்புப்பேச்சு; நாடோடிப் பாட்டு.
நைவரல் - இரங்குதல்.
நைவளம் - பாலைப்பண்; குறிஞ்சி யாழ்த் திறம்.
நைவேதித்தல் - படைத்தல்.

## நொ

நொ - துன்பம்; நோய்; மென்மை.
நொக்குதல் - உண்டு குறைத்தல்; அடித்தல்.
நொங்குதல் - விழுங்குதல்.

**நொசிதல்** - அருமையாதல்; வளைதல்; துவள்தல்; வருந்தல்.
**நொச்சி** - ஒரு பூவகை; எயில் காத்தல்; மதில்; சிற்றூர்.
**நொடிதல்** - சொல்லுதல்; ஒடிதல்.
**நொடித்தல்** - சொல்லுதல்; பழித்தல்; ஒடித்தல்; விடுவித்தல்.
**நொடுத்தல்** - விற்றல்.
**நொடை** - விற்கை; விலை; பலபண்டம்.
**நொண்டு** - முகந்து.
**நொதுத்தல்** - தளர்தல்; அழித்தல்.
**நொதுமல்** - அயல்; மென்மை; உதாசீனம்.
**நொந்தார்** - பகைவர்.
**நொந்துதல்** - அழிதல்; தூண்டுதல்.
**நொய்** - தவிடு.
**நொய்து** - இழிவு; விரைவு.
**நொய்ப்பம்** - சமர்த்து.
**நொவ்வல்** - துன்பம்.
**நொவ்விதாக** - விரைவாக.
**நொள்குதல்** - சுருங்குதல்.
**நொள்ளை** - வண்டுச்சாதி.
**நொறில்** - விரைவு; ஒடுக்கம்; நுடக்கம்.
**நொறுக்குதல்** - பொடியாக்கல்; நையப்புடைத்தல்.
**நொறுங்கு** - சிறு நொய்.
**நொறுவை** - சிற்றுண்டி.

## நோ

**நோக்கம்** - கண்; பார்வை; அழகு; அறிவு; விருப்பம்.
**நோக்கன்** - கழைக்கூத்தன்.

**நோட்டம்** - மணிச்சோதனை; மதிப்பு.
**நோதல்** - வருந்துதல்; வறுமைப்படுதல்; இரங்குதல்.
**நோப்பாளம்** - கோபம்.
**நோய்** - வருத்தம்; துன்பம்; பிணி.
**நோற்றல்** - பொறுத்தல்; தவஞ்செய்தல்.
**நோலை** - எள்ளுருண்டை.
**நோனாமை** - சகியாமை; அழுக்காறு.
**நோனார்** - போர் செய்தற்கு ஆற்றாதவர்.
**நோன்றல்** - நோற்றல்.
**நோன்றார்** - போரை அஞ்சாது பார்ப்பவர்.
**நோன்பு** - விரதம்; தவம்.
**நோன்மை** - பொறுமை; வலிமை; பெருமை.

## நௌ

**நௌ** - மரக்கலம்.
**நௌவி** - மான்.

## ப

**பஃறி** - படகு; மரக்கலம்; இரேவதி.
**பகடி** - விகடம்; கூத்து.
**பகடு** - பெருமை; வலிமை; எருது; ஆண் யானை.
**பகட்டு** - வெளிவேடம்; ஆடம்பரம்.
**பகண்டை** - விகடப்பாடல்; கவுதாரி வகை.
**பகரம்** - அழகு; பிரதி.

**பகர்தல்** - சொல்லுதல்; விலை கூறல்; கொடுத்தல்; ஒளிர்தல்.
**பகல்** - பகுக்கை ; நடுநிலை ; நடு; நுகத்தாணி; முகூர்த்தம்; நாள்; சூரியன்.
**பகவதி** - காளி; உமை.
**பகவன்** - கடவுள்; முனிவன்;
**பகவு** - துண்டு; பங்கு.
**பகழி** - அம்பு.
**பகற்கோயில்** - நீராழி மண்டபம்.
**பகன்றை** - சிவதைக்கொடி; கிலுகிலுப்பை.
**பகிரங்கம்** - வெளிப்படை.
**பகிர்** - துண்டம் ; வெளிப்புறம்.
**பகிஷ்காரம்** - விலக்கு.
**பகீரதி** - கங்கை.
**பகு** - அதிகமான்.
**பகுதல்** - பிளவுபடுதல்; பிரிதல்.
**பகுதி**-சொன்முதனிலை; மூலப்பிரகிருதி; திறை; பகுப்பு; தன்மை.
**பகுத்தல்** - பங்கிடுதல்; வெட்டுதல்; பிடுங்குதல்; தெளிவாய்க் கூறுதல்.
**பகுவசனம்** - பன்மை.
**பகுவாய்** - பிளந்தவாய்; அகன்றவாய்.
**பக்கடுத்தல்** - நொறுங்குதல்.
**பக்கம்** - இடம் ; அருகு ; சிறகு ; சுற்றம் ; சேனை ; 15 நாள்; கூறு; சுவடிப் பக்கம்; தன்மை.
**பக்கரை**-அங்கவடி; சேணம்.
**பக்கறை** - துணியுறை; குழப்பம்.

பக்கி - பட்சி; பறவை.
பக்கு-புண்ணசறு; பிளப்பு.
பக்குவம் - தகுதி; முதிர்ச்சி; ஆற்றல்.
பங்கம் - பழுது; பங்கு; பிரிவு; சேறு; தோல்வி; அவமானம.
பங்கயம் - தாமரை; ஆயுத வகை.
பங்கி - ஆண்மயிர் வகை.
பங்கு - பாகம்; முடம்; சனி.
பங்குனன் - அருச்சுனன்.
பங்கேருகம் - தாமரை.
பசத்தல் - பசுமையாதல்; நிறம் வேறுபடல்; பொன் னிறமாதல்.
பசப்பு - பசலை.
பசலை - அழகுதேமல்; பொன் னிறம்; காமநிறவேறு பாடு; மனவருத்தம்; இளமை.
பசறு - பச்சிலைச்சாறு.
பசாசம் - இரும்பு.
பசாசரதம் - பேய்த்தேர்.
பசி - உணவு வேட்கை; வறுமை.
பசிதம் - சாம்பல்; திருநீறு.
பசிரி - பசலைக்கொடி.
பசு - இடபம்; விலங்கு; யாக உயிர்; ஆன்மா; பசு.
பசுங்கல் - சந்தனக்கல்.
பசுபதி - சிவன்; கடவுள்.
பசுமை - பச்சை; இளமை; செவ்வி; பொன்னிறம்; செழுமை.
பசும்பதம் - சமைத்தற்குரிய அரிசி முதலியன.
பசும்பிடி-பச்சிலை; மரவகை.

**பசை** - பிசின்; சாரம்; பயன்; ஈரம்; பக்தி; பற்று; அன்பு; இரக்கம்.
**பச்சடம்** - பச்சவடம்.
**பச்சவடம்** - பண்டசீலை.
**பச்சாத்தாபம்** - கழிவிரக்கம்.
**பச்சிரும்பு** - உருகின இரும்பு.
**பச்சிலை**-கொடிவகை; புகைச்சரக்கு; துகில்வகை.
**பச்சை** - கலியாணவரிசை; தோல; பசுமை; பயறு; வெற்றிலை; காணிக்கை; கப்பம்.
**பஞ்சகம்** - ஐந்தின் கூட்டம்.
**பஞ்சம்** - ஐந்து; கருப்புக்காலம்.
**பஞ்சரம்** - பறவைக கூடு; இடம; உடம்பு.
**பஞ்சவன்** - பாண்டியன்.
**பஞ்சாயத்து** - ஐவர் கூடிய நியாயசபை.
**பஞ்சானனம்** - சிங்கம.
**பஞ்சி** - வெண்துகில்; வெண்திரி; செம்பஞ்சுக் குழமபு; நார்.
**பஞ்ஞீலம்** - மக்கட்டொகுதி.
**படகம்** - முழவு; பறை; பரண்; கலகம்.
**படங்கம்** - கூடாரம்; மேற்கட்டி.
**படங்கு** - ஆடை; கூடாரம்; இடுதிரை; பெருவரிச்சல்; பெருங்கொடி.
**படப்பு** - வைக்கோற்போர்; கொல்லை.
**படப்பை** - பூந்தோட்டம்; கொல்லை; ஊர்ப்புறம்.

படம் - சித்திரச்சீலை; ஆடை; சட்டை; கொடி; பாம்பினதலை; காற்ருடி.
படர் - தூதர்; ஏவலாளர்; வருத்தம்.
படர்தல் - கிளைத்தோடுதல்; வருநதுதல்; நினைத்தல்; செல்லுதல்.
படலம் - கூட்டம்; பரப்பு; நூற்பகுதி; கூடு; விதானம்; அடுக்கு; கட்படலம்.
படலிகை - கண்ணேய்; பூப்பெட்டி.
படலியம் - குதிரைச் சேணஉறுப்பு.
படலை - இலைமாலை; பூவும் தழையும் விரவித்தொடுத்த மாலை; பரப்பு; தழை; கூட்டம்; தழை; மாலை; வெளிக்கதவு.
படனம் - படிக்கை.
படாகை - பெருங் கொடி; நாட்டின் உட்பிரிவு; கூட்டம்.
படாம் - திரைச்சீலை; முகபடாம்; கூடாரம்.
படார் - சிறு தூறு.
படி-கற்படி; முகத்தலளவை; வேடம்; வகை; முறைமை; பிரதி; உருவம்; பூமி.
படிகம் - பளிங்கு.
படிகை - யானைமேற்றவிசு.
படிக்கால்-ஏணி; தலைமுறை.
படிச்சந்தம் - ஒத்த உரு.
படிதம்- துதி; மாணிக்கம்.
படிதல் - அடியிற் றங்குதல்; படர்ந்து பரவுதல்; கீழ்ப்படிதல்; மூழ்குதல்; குளித்தல்; தணிதல்.

**படித்தல்** - கற்றல்; சொல்லுதல்; துதித்தல்; பழகுதல்.
**படிப்படை** - கூலிப்படை.
**படிப்பினை** - போதனை.
**படிமக்கலம்** - முகம் பார்க்கும் கண்ணாடி.
**படிமந்தோன்** - தேவராளன்.
**படிமம்** - பிரதிமை; வடிவம்; பூதம்: விரதம; தூயமை: வெறியாட்டு; படிமக்கலம்.
**படிமை** - விரதம.
**படியகம்** - படிக்கம்.
**படிவம்** - வழிபடுதெய்வம்; உருவம்; தவவேடம்; தோற்றம; விரதம்.
**படிறு** - பொய்; வஞ்சனை; திருட்டு; கொடுமை.
**படு** - கள்; குளம்; பெரிய, கொடிய.
**படுகர்** - இழிந்தேறும் வழி; பள்ளம்; வயல்.
**படுகளம்** - போர்க்களம்.
**படுகால்** - ஏணி.
**படுகை** - ஆற்றோரத்து நிலம்; நீர்நிலை.
**படுதம்** - கூத்துவகை.
**படுதல்**-உண்டாதல்; தோன்றல்; அகப்படுதல்; இறத்தல்; அழிதல்; மறைதல்; துன்புறுதல்; தொங்குதல்; ஒலித்தல்; உடன்படுதல், பொறுத்தல்; தங்குதல்; தாழ்தல்; பொருதல்; வீழ்தல்.
**படுத்தல்** - செய்தல்; நிலைபெறச்செய்தல்; சேர்ப்பித்தல்; வளர்த்தல;-பரப்புதல்; அகப்படுத்தல்; அழித்தல்;

வீழ்த்துதல்; தாழ்த்தல்; கிடைத்தல்.
**படுபனை** - காயக்கும்பனை.
**படுபொருள்** - புதையல; நிகழ்வது.
**படுமுறை** - அபராதம.
**படுவி** - குறியவள்; கள் விற்பவள்.
**படுவை** - தெப்பம்.
**படை** - சேனை; பரிவாரம்; ஆயுதம்; கலப்பை; கல்லணை; அடுககு; படுக்கை; மேகபபடை.
**படைஞர்** - போர்வீரர்.
**படைத்தல்** - சிருட்டித்தல்; பரிமாறுதல்; பெற்றிருத்தல; நிவேதித்தல்.
**படைப்பு** - செல்வம்; நிவேதனம்; சிருட்டி.
**படைவீடு** - ஆயுதச்சாலை; பாசறை.
**பட்சணம்** - உண்கை; சிற்றுண்டி.
**பட்சபாதம்** - ஒருதலைச் சார்பு.
**பட்சம்** - பக்கம்; அன்பு; கட்சி.
**பட்சியம்** - பணியாரம்.
**பட்டகம்** - துணி.
**பட்டடை** - அடைகல்; இளி நரம்பு; உலைக்களம்.
**பட்டம்** - பருவம்; நீர்நிலை; நெற்றித்தகடு; மேலாடை; பட்டப்பெயர்; காற்றுடி; உயர்பதவி; அணிவகை.
**பட்டயம்** - வாள்; பட்டா.
**பட்டவர்த்தனர்** - சிற்றரசர்.
**பட்டறை** - தொழிற்சாலை; சுவரளவு.

**பட்டன்** - புலவன்; கோயிலருச்சகன்.
**பட்டாங்கு** - உண்மை; சாத்திரம்.
**பட்டி** - ஆட்டுக்கிடை; சிற்றூர்; மனவடக்கமற்றவன்; திருட்டு மாடு; சீலை; அட்டவணை; நெறியிலி; வியபசாரி; களவு.
**பட்டிகை** - ஏடு; அரசபத்திரம்; அரைக்கச்சை; யோகபட்டி;; தெப்பம்.
**பட்டிமண்டபம்** - வித்தியாமண்டபம்; திருவோலக்கம்.
**பட்டிமை** - வஞ்சனை.
**பட்டினம்** - கடற்கரையூர்.
**பட்டு** - சிற்றூர்; பட்டுநூல்; கட்டியம்; மாகதர்.
**பட்டோலை** - ஆணையோலை; அட்டவணை.
**பணதி**-வேலைப்பாடு; செயல்; ஆபரணம்; கற்பனை.
**பணம்** - ஒரு நாணயம்; பாம்பின் படம்; யானை நடத்துமாயுதம்.
**பணயம்** - ஈடாக வைத்த பொருள்; ஈடு.
**பணவம்** - தம்பட்டம்.
**பணவை** - பரண்; பேய்; கழுகு.
**பஞ்மணி** - நாகரத்தினம்.
**பணி**-தொண்டு; ஆபரணம்; வேலைப்பாடு; பணிகை; சொல்; கட்டளை; விதி; நாகம்.
**பணிக்களரி**-தொழில் செய்யுமிடம்.
**பணிக்கன்** - படைக்கலம் கூத்து முதலிய பயிற்று

வோன்; கொற்றன்; யானைப்பாகன்; நாவிதன்.
பணிதம் - பந்தயப் பொருள்.
பணிதல் - தாழ்தல்; இறங்குதல்; அடங்குதல்; வணங்குதல்.
பணித்தல் - மிதித்தல்; குறைத்தல்; தாழ்த்துதல்: அருளிச் செய்தல்; கொடுத்தல்; ஆணையிடுதல்.
பணிலம் - சங்கு; முத்து.
பணிவிடை - குற்றேவல்; திருப்பணி.
பணிவு-குறை; கீழ்ப்படிதல்.
பணை - பெருமை; மூங்கில்; கிளை; அரசமரம்; மருதநிலம்; பந்தி; குதிரை யானைகள் தங்குமிடம்; முரசு; பறை; மிகுதி; வயல்.
பணைத்தல் - பருத்தல்; செழித்தல்; பிழைத்தல்.
பணையம் - பந்தயப்பொருள்; ஈடு; காலணிவகை.
பண்-இசை; கலனை; நீர்நிலை; தகுதி; அலங்காரம்; யானை மேல் தவிசு.
பண்டகன் - அலி.
பண்டம் - பொருள்; நிதி; அறிவு; உடல்; உண்மை; பழம்.
பண்டர் - அசுரர்; பாணர்.
பண்டாரம் - பொக்கிஷம்; களஞ்சியம்; சைவத்துறவி; ஒரு வகுப்பினர்.
பண்டி - வண்டி; வயிறு; யானை; உரோகிணிநாள்.

**பண்டிதன்** - புலவன்; வைத்தியன்; நாவிதன்; ஒரு கூத்தன்; சுக்கிரன்.
**பண்டு, பண்டை** - பழமை; முற்காலம்.
**பண்ணத்தி** - ஒருவகைச் செய்யுள்.
**பண்ணல்** - அமைத்தல்; அலங்கரித்தல்.
**பண்ணவன்** - கடவுள்; குரு; பாணன்.
**பண்ணன்** - சிறுகுடி கிழான்.
**பண்ணிகாரம்** - பல பண்டம்; பணியாரம்.
**பண்ணியம்** - சோறு; நுகர்பொருள்; பண்டம; இசைக்கருவி.
**பண்ணுறை** - புணைந்துரை.
**பண்ணுறுத்தல்** - சித்தஞ்செயதல்; அலஙகரித்தல்.
**பண்ணை** - வயல; தோட்டம்; ஓடை; மகளிர் கூட்டம்; தொகுதி; ஒரு கீரை; விலங்கு துயிலிடம.
**பண்பு** - குணம்; இயல்பு; அழகு; முறை.
**பண்விடுதல்** - நிலைகுலைதல்.
**பதக்கு** - இரு குறுணி.
**பதங்கம்** - பறவை; விட்டில்; பாதரசம்.
**பதங்கன்** - சூரியன்.
**பதடி** - புதர்; பயனின்மை.
**பதப்பர்** - மணற்கோட்டை.
**பதணம்** - மதிலுண்மேடை; மதில்.
**பதம்** - பக்குவம்; சோறு; ஈரம்; கள்; இனிமை; மொழி; இசைப்பாட்டு; பதவி; மந்திரம்.

**பதயுகம்** - இணையடிகள்.
**பதர்** - குற்றம்.
**பதலை** - ஒரு கட்பறை; தாழி; கலசம்; மலை; தோணி.
**பதவம்** - அறுகு.
**பதவு** - புண்ணியலோகம்; நிலை.
**பதவி** - அறுகு; புல்; புன்மை; அமைதி.
**பதவை** - வழி.
**பதறுதல்** - கலங்குதல்; யோசனையின்றி அவசரப்படுதல்.
**பதனம்** - பத்திரம்; பாது காப்பு; இறககம்; தாழ்மை; அமைதி.
**பதாகினி** - சேனை.
**பதாகை** - விருதுக் கொடி; கொடி.
**பதாதி** - காலாட்படை.
**பதி** - பதிகை; நாற்று; ஊர்; தலைவன்; கணவன்; கடவுள்; கோவில்; குதிரை.
**பதிகம்** - பத்துச் செய்யுள் கொண்டது; பாயிரம்.
**பதிகன்** - வழிப்போக்கன்; காலாள்.
**பதிதல்**-அழுந்துதல்; ஆழ்தல்; தங்குதல்; நிலையாதல்.
**பதிதன்** - ஒழுக்கந் தவறியவன.
**பதித்தல்** - அழுத்துதல்; இழைத்தல; குழியாக்குதல்.
**பதியிலார்** - கணிகையர்.
**பதிவிரதை** - கற்புடையவள்.
**பதிவு** - அழுத்துகை; ஒளித்திருக்கை; தணிவு; ஏற்படுத்தப்பட்ட செலவு; பதிகை.

**பதுக்கை** - கற்குவியல்; மணற்குன்று; சிறு தூறு; பாறை; குவியல்.

**பதுமம்** - தாமரை; கோடா கோடி; ஒரு நிதி.

**பதுமை** - பாவை; விக்கிரகம்.

**பத்ததி** - ஒழுங்கு; வழி; சொற்பொருள்; ஆகமக் கிரியை; நெறி நூல்.

**பத்தம்** - குவியல்; உண்கலம்.

**பத்தர்** - தொட்டி; குடுக்கை; அடியார்.

**பத்தல்** - நீரிறைக்குங் கருவி; குழி பத்தர்.

**பத்திமை** - கடவுட் பற்றுடைமை.

**பத்திரம்** - இலை; சாசனம்; அழகிய உருவம்; பாது காப்பு; ஏடு; அம்பு; ஒரு வாள்.

**பந்தணம்** - பற்று.

**பந்தம்** - கட்டு; உறவு; தீவட்டி.

**பந்தயம்** - போட்டி; போட்டிப் பொருள்.

**பந்தி** - வரிசை; ஒழுங்கு; குதிரைச்சாலை; கூடுதல்.

**பந்து** - மட்டத் துருத்தி; சுருள்; நீர் வீசுங் கருவி; சுற்றம்.

**பப்பு** - பரப்பு; ஒப்பு.

**பமரம்** - வண்டு.

**பம்பல்** - துளி; பரந்த வடிவு; களிப்பு.

**பம்புதல்** - செறிதல்; பரவுதல், வேடிக்கை செய்தல்; ஒலித்தல்; எழுதல்.

**பம்பை** - பறை; ஒருபொய்கை; ஓர் யாறு; பரட்டை மயிர்.
**பம்முதல்** - மூட்டம் போடுதல; செறிதல்.
**பயத்தல்** - விளைதல்; பூத்தல்; பலித்தல்; கொடுத்தல்; பெறுதல்.
**பயம்** - நீர்; அச்சம்; பால்; தன்மை
**பயம்பு** - குழி; வசம்பு.
**பயலி** - மூடன்.
**பயல்**-பங்கு; குறிப்புச்சொல்.
**பயன்** - பலன்; பொருள்; பால்.
**பயிக்கம்** - பிச்சை.
**பயிட்டம்** - முத்துவகை.
**பயிர்** - ஒலிக குறிப்பு; பறவைக் குரல்; வாச்சியம்; சைகை.
**பயிர்தல்**-அழைத்தல்; இசைத்தல.
**பயிர்த்தல்** - அருவருத்தல்; மனங்கொள்ளாதிருத்தல்.
**பயிர்ப்பு** - அருவருப்பு; மனங்கொள்ளாமை; பிசின்.
**பயிலுதல்** - பழகுதல்; நடமாடுதல்; தங்குதல்; கற்றல; சொல்லுதல்; நிகழ்தல்; நெருங்குதல்; ஒலித்தல்.
**பயிற்றுதல்** - பழக்குதல்; பலகாற் கூறுதல்; செய்தல; கொள்ளுதல்.
**பயினி** - ஒரு பூ; மரவகை.
**பயின்** - பிசின்; சுக்கான்; பாவேடு.
**பயோததி** - பாற்கடல்.
**பயோதரம்** - முலை; மேகம்; கடல்; பால்.

**பரகதி** - முத்தி.
**பரகீயம்** - பிறர்க்குரியது.
**பரக்குதல்** - அலைந்து திரிதல்.
**பரசிரம்** - யாவருமறிந்தது.
**பரசு** - மழு; கோடாரி; மூங்கில்.
**பரசுதல்** - துதித்தல்.
**பரடு** - காடு; கணு.
**பரட்டையம்** - ஒட்டுச் சல்லடம்.
**பரணி** - ஒருநாள்; போர்க்களம் பாடும் பிரபந்த வகை; சாந்துச் செப்பு.
**பரண்** - காவலிருக்கை; மேற்றட்டு.
**பரதம்** - கூத்து; ஒரு பேரெண்.
**பரதர்** - வணிகர்; கூத்தர்; கடலோடிகள்.
**பரதவர்** - நுளையர்; நெய்தனிலமக்கள்; தென்திசைகுறுநில மன்னர்.
**பரதவித்தல்** - வருந்துதல்; இரங்குதல்.
**பரத்தல்** - பரவுதல்; தட்டையாதல்; அலமருதல்.
**பரத்துதல்** - விரித்தல்.
**பரத்தை** - பொதுமகள். வேற்றுப்பெண்; அயன்மை.
**பரந்தாமன்** - திருமால்.
**பரபக்கம்** - பிறர் பக்கம்.
**பரபத்தியம்** - கொடுக்கல் வாங்கல்.
**பரப்புதல்** - பார்த்தல்.
**பரமண்டலம்** - வானுலகம்; அன்னிய நாடு.
**பரமபதம்** - மோட்சம்.
**பரமம்** - திவ்வியம்; சிறப்பு; முதற்கடவுள்.

**பரமன்** - கடவுள்.
**பரமார்த்தம்** - மேலான பொருள்; உண்மையறிவு; மோட்சம்.
**பரம்** - மேலானது; மேலுலகம்; அன்னியம்; கடவுள்; சார்பு; உடல்; கேடகம.
**பரம்பரை** - தலைமுறைத் தொடர்பு.
**பரம்பு** - உழுத கழனியைச் சமப்படுத்தும பலகை; பரவிய நிலம்; வரம்பு.
**பரம்புதல்** - பரவுதல்; நிறைதல்.
**பரல்** - பருக்கைக்கல்; சுக்கான் கல; விதது.
**பரவர்** - கடற்கரை மக்கள்.
**பரவுதல்** - போறறுதல்; புகழதல்; துதித்தல
**பரவை** - பரபபு; கடல்; ஆடல்.
**பரவை வழக்கு** - உலக வழக்கு.
**பரன்** - மேலானவன்; கடவுள், அன்னியன்; ஆன்மா.
**பரஸ்பரம்**- ஒனறுக்கொன்று; ஒருவருக்கொருவர்.
**பரா** - மிகுதி.
**பராகம்** - தூளி; மகரந்தம்.
**பராக்கிரமம்** - வீரம்; வல்லமை.
**பராக்கு** - கவனமின்மை; சாக்கிரதையைக குறிக்கும் சொல்.
**பராங்குசன்** - எதிரிகளுக்கு அங்குசம் போனறவன்; நம்மாழ்வார்.
**பராதீனம்** - சுதந்திரமின்மை.

**பராபவம்** - தோல்வி; அப சாரம்.
**பராமரித்தல்** - ஆதரித்தல்; ஆலோசித்தல்.
**பராமுகம்** - அலட்சியம்.
**பராரி** - ஓடிப்போனவன்.
**பராரை** - பருத்த அடிமரம்.
**பரார்த்தம்** - பிறர்பொருட் டானது; ஆயிரங் கோடா கோடி;
**பராவணம்** - துதிக்கப்படும் பொருள்.
**பராவுதல்** - வணங்குதல்; புகழ்தல்.
**பரி** - செலவு; குதிரை; அதி சயம்; (விடுதல்; மிகுதி; சூழல்; சிறப்பு; மகிழ்ச்சி; கோபம் முதலிய பொரு ளுணர்த்தும் ஓர் இடைச் சொல்.)
**பரிகரம்** - துணைக்கருவி; சேனை; குழு.
**பரிகரித்தல்** - நீக்குதல்; கடத் தல்.
**பரிகலம்** - குருமார் உண் கலம்; பரிவாரம்.
**பரிகாரம்** - மாற்றுமுபாயம்; பொருள்கள்.
**பரிகாரி** - வைத்தியன்.
**பரிகை** - மதிலுண் மேடை; அகழி.
**பரிக்காரர்** - குத்துக்கோற் காரர்.
**பரிக்கோல்** - குத்துக்கோல்; தோட்டி.
**பரிசம்** - தொடுகை; சீதனம்.
**பரிசனம்** - பரிவாரம்; ஏவ லாளர்; சுற்றம்.

பரிசனவேதி - பொன் செய்யு மூலிகை.
பரிசாரகம் - ஏவற்றொழில்; வணக்கம்; சமையற் றொழில்.
பரிசிலர் - கூத்தர்; ஏற்றுண்டு வாழ்வோர்.
பரிசில் - கொடை; தியாகம்.
பரிசு - நன்மை; விதம்; கொடை; பெருமை.
பரிசுத்தம் - மிகத் தூய்மை; துப்புரவு.
பரிசை - கேடகம்.
பரிச்சயம் - பழக்கம்.
பரிச்சேதம்-எல்லை; முழுமை.
பரிணதன் - கற்றோன்.
பரிணமித்தல் - நிலைமாறுதல்.
பரிணயம் - விவாகம்.
பரிணாமம் - இயற்கையினின் றும் திரிதல்.
பரிதல் - இரங்குதல்; வருந்து தல்; ஓடுதல்; பகுத்தறிதல்; அறுதல்; அழித்தல்.
பரிதாபம் - பெருந்தாகம்; இரக்கம்.
பரிதானம் - இலஞ்சம்.
பரிதி - பரிவேடம்; சூரியன்; தேருருளை; சக்கராயுதம்.
பரித்தல் - சுமத்தல்; பாது காத்தல்; தரித்தல்; அறுத் தல்; சூழ்தல்; ஓடுதல்.
பரித்தியாகம் - முற்றுந் துறத்தல்.
பரித்திராசம் - பெரும் பயம்.
பரிபவம் - எளிமை; அவ மானம்.
பரிபாகம் - முதிர்ச்சி; பக்கு வம்; சமக்கை.
பரிபாலனம் - பாதுகாப்பு.

**பரிபாஷை** - குறியீடு; குழூஉக் குறி.
**பரிபுரம்** - சிலம்பு.
**பரிப்பு** - இயக்கம்; தாங்குகை.
**பரிமளம்** - மிகுமணம்.
**பரிமா** - குதிரை.
**பரிமாணம்** - அளவு.
**பரிமாறுதல்** - உணவு படைத்தல்; மாற்றிக்கொள்ளுதல்.
**பரிமுகமாக்கள்** - கின்னரர்.
**பரிமுகவம்பி** - குதிரைமுக வோடம்.
**பரிமேயம்** - அளவுபட்டது.
**பரியகம்** - பாதகிண்கிணி.
**பரியங்கம்** - கட்டில்.
**பரியம்**-மணப்பரிசு; முலைவிலை.
**பரியாயம்** - ஒத்த பொருளுடையது.
**பரியாளம்** - பரிவாரம.
**பரிவட்டம்** - கடவுளாடை.
**பரிவருத்தனை** - பண்ட மாற்றுகை.
**பரிவாரம்** - சூழ்படை.
**பரிவு** - அன்பு; இரக்கம்.
**பரிவேடம்** - ஊர்கோள் வட்டம்.
**பரிவேட்பு** - வட்டம.
**பரிஷ்காரம்** - விமரிசை; தெளிவு; உறுதி.
**பரீஇ** - வருத்தி.
**பருகுதல்**-குடித்தல்; உண்ணுதல்.
**பருணன்** - நிருவகிப்பவன்.
**பருணிதன்** - புலவன்.
**பருதி** - தேருருள்; வட்டம்; சூரியன்.
**பருந்தாட்டம்** - பெருந்துன்பம்.
**பருப்பதம்** - மலை.

**பருப்பு** - துவரை முதலியவற்றின் உள்ளீடு; பருமை.
**பருப்பொருள்** - பிண்டப் பொருள்.
**பருமம்** - கல்லணை; அரைப் பட்டிகை; யானைக்கழுத்திடு மெத்தை; ஒரு மேகலை; பருமை.
**பருமித்தல்** - அலங்கரித்தல்; படைக்கலம் பயிலுதல்.
**பருவதம்** - மலை; மீன்வகை.
**பருவம்** - தக்க காலம்; முழு நிலா நாள்.
**பருவதாரி** - இந்திரன்.
**பருவரல்**-துனபம்; பொழுது.
**பருவி** - பருத்தி.
**பரூஉ** - பருமை.
**பரூஉக்கை** - வண்டியுளுறுப்பு.
**பரேர்** - மிக்க அழகு.
**பரை** - சிவசக்தி.
**பரோட்சம்** - கண்ணுக்கெட்டாதது.
**பரோபகாரம்** - பிறர்க்குதவி.
**பர்ணசாலை** - இலைக்குடில்.
**பர்த்தா** - கணவன்.
**பலகணி** - சாளரம்.
**பலகை** - கேடகம்.
**பலம்** - பழம்; பயன்; வலி; படை; உறுதி; உடை நெற்றி.
**பலாகம்** - கொக்கு.
**பலாசம்** - பலா; புனமுருக்கு; இலை; பசுமை.
**பலாயனம்** - புறங்காட்டுகை.
**பலாலம்** - வைக்கோல்.
**பலி** - பலிச்சோறு; பலியுயிர்; பிச்சை; அருச்சனைப் பூ; சாம்பல்; காக்கை.

**பலிசை** - இலாபம்; வட்டி.
**பலிதை** - கிழவி.
**பலுகு** - பயிர்களைப் பெயர்க்கும் காறுமரம்.
**பலுக்குதல்** - பேசுதல்; தெளிய உச்சரித்தல்.
**பல்காழ்** - மேகலை.
**பல்காற்பறவை** - வண்டு.
**பல்குதல்** - பலவாதல; மிகுதல்.
**பல்லணம்**-குதிரைக்கல்லணை.
**பல்லம்** - கரடி; அம்பு; ஒரு பேரெண்.
**பல்லவம்** - ஒருநாடு; தளிர்; அம்பு.
**பல்லாண்டு** - பலவாண்டு; வாழ்த்து.
**பல்லி** - உழுகருவி; வண்டியுறுப்பு; ஓர் உயிரவகை.
**பல்லியம்** - பல வாத்தியம்.
**பல்லுறைப்பை** - பல அறைகளையுடைய பை.
**பல்லூழ்** - பல தடவை.
**பல்வலிப்பறவை** - சரபம்.
**பவகாரணி** - அழகர்மலைப் பொய்கை.
**பவஞ்சம்** - பிசபஞ்சம்.
**பவனம்** - நாகலோகம்.
**பவதி** - பார்வதி.
**பவத்தல்** - தோன்றுதல.
**பவம்** - பிறப்பு; உலகம்; பாவம்.
**பவர்** - கொடிக்கூட்டம்; பாவிகள்; நெருக்கம்.
**பவர்தல்** - கூடுதல்; நெருங்கியிருத்தல்.
**பவனம்** - காற்று; வீடு; பூமி; சுவர்க்கம்; விமானம்.

**பவனி** - உலாவருகை.
**பவன்** - சிவபிரான்; கடவுள்.
**பவானி** - பார்வதி; ஒரு நதி.
**பவித்திரம்** - மிகு சுத்தம்; தருப்பை மோதிரம்; பூணூல்; நெய்; தேன்.
**பவிஷயம்** - எதிர்காலம்.
**பவுஞ்சு** - சேனை.
**பவுரி** - கூத்துவகை.
**பவ்வம்** - கடல்; நுரை
**பழங்கண்** - துன்பம்; மெலிவு.
**பழவடியார்** - வழித்தொண்டர்.
**பழவிறல்** - பழைய தன்மை.
**பழனம்** - வயல்; பொய்கை.
**பழிச்சுதல்** - வாழ்த்துதல்; வணங்குதல்.
**பழு** - விலா; பேய்; ஏணியின படிச்சட்டம்.
**பழுக்காய்** - பாக்கு; மஞ்சள் கலந்த செந்நிறம்.
**பழுது** - உடம்பு; குற்றம்; சிதைவு; பயனின்மை.
**பழுதை** - வைக்கோற்புரி; கயிறு.
**பழுமணி** - மாணிக்கம்.
**பழுமரம்** - பழுத்தமரம்; ஆலமரம்.
**பழுப்பு** - அரிதாரம்; பொன்னிறம்.
**பழுவம்** - காடு; கூட்டம்.
**பழுனுதல்** - முதிர்தல்; முடிவடைதல்.
**பழை** - கள்.
**பழையர்** - கள் விற்பவர்.
**பழையோள்** - காடுகிழாள்; காளி.
**பளகம்** - மலை; பவளம்.

**பளகு-குற்றம்** ; மூடத்தனம.
**பளக்கு** - கொப்புளம்.
**பளிக்கு** - பளிங்கு.
**பளிங்கு** - கண்ணுடி ; கர்ப்பூரம.
**பளிதம்** - பச்சைக் கர்ப்பூரம் ; பச்சடி ; பாற்சோறு, ஒரு பேரெண்.
**பள்குதல்** - பதுங்குதல்.
**பள்ளர்** - உழவர்.
**பள்ளி** - சிறறூர் ; இடைச்சேரி; முனிவரிருக்கை; புத்தன்கோயில்; வேலைச்சாலை ; படுக்கை ; பள்ளிக்கூடம் ; வனனியன் ; குறுமபன்.
**பள்ளித்தாமம்** - கோயிலிற் சாத்தும மாலை.
**பள்ளியந்துலா** - படுகைகைப் பல்லககு; சயன தண்டிகை.
**பள்ளியெழுச்சி** - தூக்கம் விட்டெழுதல்.
**பள்ளையம்** - சிறுதெய்வ ஆராதனை; உண்கலம்.
**பறட்டை** - வளர்ச்சியற்றது.
**பறண்டை** - ஒரு வாத்தியம் ; கையின் முட்டி.
**பறந்தலை** - பாழிடம; புறங்காடு ; சுடுகாடு ; போர்களம்; படை வீடு.
**பறப்பன்** - தேள் ; அவசரக்காரன்.
**பறப்பை** - பறவை ; யாக வேதிகை; நெய்மரவை.
**பறம்பர்** - தோல்வேலை செய்பவர்.
**பறம்பி** - மோசக்காரி.
**பறம்பு** - ஒருமலை.
**பறம்புதல்** - அடித்தல்.
**பறவாப்புள்**-சொல்நிமித்தம்.

**பறல்** - பறவை.
**பறழ்** - அணில், நாய், பன்றி; புலி முதலியவற்றின் குட்டி.
**பறளை** - குறடு; பற்றிரும்பு; தகடு.
**பறி** - கொள்ளை; மீன்பிடி கருவி; ஓலைப்பாய; உடம்பு; பொன்.
**பறிதல்** - வெளிப்போதல்; கட்டவிழ்தல்; உணடாதல்.
**பறித்தல்** - நீக்குதல; அழித்தல; பிடுங்குதல.
**பறிமுறை** - பல வீழ்ந்து முளைத்தல.
**பறை** - வாத்தியம்; பறவை; சிறகு; அழிகை.
**பறைதல்** - சொல்லல்; தேயதல; அழிதல்.
**பறைத்தல்** - சொலலுதல்; நீககுதல்.
**பறையலகு** - பலகறை.
**பற்குனன்** - அருச்சுனன்.
**பற்சன்னியன்** - வருணன.
**பற்பதம்** - பருவதம்.
**பற்பம்** - தாமரை; தூள்.
**பற்றம்** - கற்றை; கூட்டம்.
**பற்றலர்** - பகைவர்.
**பற்றுக்கை**-அம்புகள் கட்டுங் கயிறு.
**பற்றுசு** - பற்றுக்கோடு; உலோகங்கள் பொருந்த வைககும் பொடி.
**பற்று**-ஆசை; அனபு; விருப்பு; வாரப்பாடல்; வயல்; நட்பு; செல்வம்.
**பற்றுக்கோடு** - ஆதாரம்; கடடுத்தறி.
**பற்றுள்ளம்** - உலோபம்.

**பற்றை** - சிறுதூறு; செங்காந்தள்.
**பனசம்** - பலா; முள்.
**பனத்தி** - பார்ப்பனத்தி.
**பனம்புடையல்** - பனைமாலை.
**பனவன்** - பார்ப்பான்.
**பனாட்டு** - பனம்பாகு.
**பனி** - பனி; நீர்த்துளி; குளிர்ச்சி; கண்ணீர்; இனிமை; அச்சம்; துன்பம்; நடுக்கம்.
**பனிச்சை** - பெண் மயிர் முன் முடிச்சு.
**பனித்தல்**-நடுங்கல்; வடிதல்; வருந்துதல்; அடித்தல்.
**பனிற்றல்** - தூவல்.
**பனுவல்**-பஞ்சி நூல்; சொல்; பாட்டு; நூல்; கல்வி; அற நூல்; எஃகுறு பஞ்சு; ஆராய்ச்சி.
**பனுவலாட்டி** - கலைமகள்.
**பன்** - அரிவாட் பல்.
**பன்றிப்பத்தர்** - பன்றிக் கூழ்த்தொட்டி.
**பன்னகம்** - இலை; பாம்பு.
**பன்னல்** - பருத்தி; சொல்; ஆராய்கை.
**பன்னி** - பத்தினி.
**பன்னுதல்** - ஆராய்தல்; புகழ்தல்; பின்னுதல்; நின்று நின்று சொல்லுதல்; பஞ்சு ஆய்தல்.

## பா

**பா** - பாட்டு; நெசவுப்பா; பரப்பு; கைமரம்; பஞ்சி நூல்; தூய்மை; காப்பு.
**பாகசாதனன்** - இந்திரன்.

பாகசாதனி - அருச்சுனன்.
பாகடை - பாக்கு வெற்றிலை.
பாகதம் - பிராகிருதம்; ஒரு மொழியின் மூலம்; வடமொழித் திரிவு.
பாகம் - சமையல்; பக்குவம்; செய்யுள்நடை; பங்கு; பக்கம்; பறைவகை.
பாகல் - ஒருகொடி; பலா.
பாகர் - தேரின் மேற்றட்டுக கைப்பிடி; தேர்ப்பாகர்.
பாகவதர் - வைணவப் பெரியார்; இசையுடன் சமயக கதைகள் சொல்வோர்.
பாகன்-பக்குவம் பெற்றவன்; ஓட்டுபவன்.
பாகிடுதல் - பிச்சையிடுதல்.
பாகித்தல் - பங்கிடுதல்.
பாகு - வெல்லப்பாகு; பாக்கு; பகுதி; பிசசை; பாகன்; திறன; அழகு; பாகை; கரை.
பாகுபாடு - பகுப்பு.
பாகுடம் - அரசிறை; கையுறை.
பாகுடி - வெகுதொலை.
பாகை - வட்டச்சிறு பகுதி; தலைப்பாகை.
பாக்கம் - மருதநிலத்தூர்; பட்டினம்; அரசனிருக்கை; கடற்கரையூர்; பக்கலூர்.
பாக்கியம் - நல்வினை; செல்வம்.
பாக்கு - அடைக்காய்; (எதிர் கால வினையெச்ச விகுதி, தொழிற்பெயர் விகுதி.)
பாக்கை - பாக்கம்.
பாங்கர் - பாங்கு.

**பாங்கு** - பக்கம்; நன்மை; தன்மை; தோழமை; அழகு; உரிமை; தகுதி; பணஞ் சேர்ப்பிடம்.
**பாசகர்** - மடையர்.
**பாசடை** - பச்சிலை.
**பாசண்டம்** - புறச் சமயக் கொள்கை.
**பாசம்** - கயிறு; வியூகவகை. தளை; அன்பு; சுற்றம்; பேய்;
**பாசவர்** - இலைக்கறி; இறைச்சி; கயிறு ஆகிய இவை விற்போர்.
**பாசவல்** - பசிய அவல்; பசிய விளைநிலம்.
**பாசறை** - படைவீடு; இலை செறிந்த முழை; துன்பம.
**பாசனம்** - வெள்ளம்; பாத்திரம்; சுற்றம்; மரக்கலம.
**பாசி** - பசுமையுடையது; நீர்ப்பாசி; கிழக்கு; கருமணி.
**பாசிலை** - பசசிலை; வெற்றிலை.
**பாசினம்** - கிளிக்கூட்டம்.
**பாசு** - பசுமை; மூங்கில்; பாசம்; தைரியம்; கிளி.
**பாசுணம்** - பக்கம்.
**பாசுபதம்** - சிவன் கணை; ஒரு சிவமதம்
**பாசுரம்** - திருப்பாடல்; திருமுகம்.
**பாச்சிகை** - சூதாடு கருவி.
**பாஞ்சசன்னியம்** - திருமாவின் சங்கம்; தீ; நாணல்.
**பாஞ்சராத்திரம்** - ஒரு வைணவ ஆகமம்
**பாஞ்சாலிகம்** - பொம்மலாட்டம்.
**பாடகம்** - மகளிர் காலணி; பாடுமிடம்; துகில் வகை;

சிவப்பு; தெரு; நிழல்; கரை; கூலி; வயற்பகுதி.
பாடம் - ஒளி; சொல்.
பாடலம் - சிவப்பு; சபதம்; குதிரை; பாதிரி.
பாடவம் - பாடகம்; வல்லமை; பெருமை.
பாடி - நகரம்; பாடி வீடு; முல்லைநிலத்தூர்.
பாடித்தல் - பேசுதல்.
பாடிமிழ்வு - ஒலித்தல்.
பாடியம்-பேருரை; பாஷியம்.
பாடிவீடு - பாசறை.
பாடினி - பாடுபவள்.
பாடு - உண்டாகுகை; முறைமை; செவ்வி; பயன்; உலகவொழுக்கம்; பெருமை; ஓசை; உழைப்பு; வருத்தம்; படுக்கைநிலை; தூக்கம்; சாவு; கேடு; பூசுகை; அத்தமனம்; பக்கம்; இடம்; வேலை.
பாடுகிடத்தல் - வரங்கிடத்தல்.
பாடுதுறை - புலவர்பாடுதற்குரிய போர்த்துறை.
பாடுபெயல் - விடாமழை.
பாடுவி - புகழ்பவள்.
பாடை - மொழி; பிணக்கட்டில்.
பாட்டம் - தோட்டம்; மேகம்; ஆசசல்; மழை; வரி; விளையாட்டுப் பகுதி; தகைமை; ஒரு மதம்.
பாட்டி - கிழவி; பெற்றோரின் தாயர்; பாடனமகளிர்.
பாட்டியல் - செய்யுணூலிலக்கணங் கூறு நூல்.
பாணம் - அம்பு; ஓரங்க நாடகவகை; பூம்பட்டு.

**பாணன்** - பாடுங் குலத்தான்; வீணன்; ஓரசுரன்.
**பாணி** - செவ்வி காலம்; இசைப்பாட்டு; தாளம்; கூத்து; அழகு; கை; பக்கம்; சொல்; ஊர்; நீர்.
**பாணிக்கிரகணம்** - கைப்பற்றுதல்; கலியாணம்.
**பாணித்தல்** - தாமதித்தல்; பின்வாங்குதல்.
**பாணிமுகம்** - உடல்விட்டுயிர் போகு முறை.
**பாறு** - பாட்டு.
**பாண்** - பாட்டு; தாழ்ச்சி; பாணர் சாதி.
**பாண்டரங்கம்** - சிவம்: திரிபுரக் கூத்து.
**பாண்டல்** - பழமை; துர் நாறறம்.
**பாண்டி** - பாண்டிய நாடு; மாட்டு வண்டி; எருது.
**பாண்டித்தியம்** - கல்வித் திறம்.
**பாண்டியம்** - எருது; உழவு; பாண்டிய நாடு.
**பாண்டில்** - வட்டம்; வட்டக் கட்டில; கிண்ணி; கஞ்ச தாளம்; வண்டி; குதிரைச் சேணம; நாரை; எருது; விளக்குக் கால்; வாகைமரம்; விட்டதேதால்.
**பாண்டில் விளக்கு** - கால் விளக்கு.
**பாண்டிற்காசு** - அணிவகை.
**பாண்டுகம்பளம்** - இந்திரன் ஆசனம.
**பாதகம்** - பெரும்பாவம்.
**பாதங்கம்** - பொடி; சாம்பல்.

**பாதசாலகம்** - காலணிப் பொது.
**பாதபீடிகை** - புத்தர் பாதப் படிமப்பீடம்.
**பாதவம்** - மரம்; தோப்பு; மலை.
**பாதனம்** - வணக்கம்; கீழ் முகம்.
**பாதாதிகேசம்** - அடிமுதல் தலைவரையில்.
**பாதாள மூலி** - நெருஞ்சில்.
**பாதிடுதல்** - பங்கிடுதல்.
**பாதித்தல்** - வருத்துதல்.
**பாதுகை** - மிதியடி; திருவடி நிலை.
**பாதை** - ஒற்றையடி வழி; முறை; மிதவை; துன்பம்.
**பாத்தருதல்** - பரவுதல்; உருகியோடுதல்.
**பாத்தல்** - பங்கிடுதல்.
**பாத்தி** - பகுதி.
**பாத்தியப்படுத்துதல்** - நிலை பெறச் செய்தல்.
**பாத்தியம்** - உரிமை; கால கழுவுநீர்; பிணை; பங்கு.
**பாத்தியன்** - அடியான்.
**பாத்திரம்** - கடிஞை; கொள் கலம; தகுதி; நடிப்போர்.
**பாத்திலார்** - வேசியர்.
**பாத்து** - இணை; நீ க க ம்; சோறு; ஐம்புல வின்பம்.
**பாத்துதல்** - பகுத்தல்
**பாத்தூண்** - பகுத்துண்டற குரிய உணவு.
**பாந்தம்** - இணக்கம்; ஒழுங்கு; பகரவீறு.
**பாந்தவம்** - உறவு முறை.
**பாந்தள்** - மலைப்பாம்பு; பாம்பு.

**பாந்துதல்** - பதுங்குதல்.
**பாமம்** - புண்; ஒளிபரப்பு; கோபம்.
**பாமரம்** - மூடத்தனம்; இழிவு.
**பாம்புரி** - மதிலுறுப்பு.
**பாய** - பரவ.
**பாயம்** - புணர்ச்சி; விருப்பம்; விருப்பமானது.
**பாயல்** - மக்கட் படுக்கை; உறக்கம்; பாதி.
**பாயிரம்** - முகவுரை.
**பாயு** - குதம்.
**பாயுரு** - எருவாய்.
**பாய்ச்சிகை** - கவறு.
**பாய்மா** - குதிரை.
**பாரங்கதன்** - கல்விக்கரை கணடவன்; தாங்குபவன்.
**பாரணம்** - உபவாசமிருந் துண்கை; திருபதி; மேகம.
**பாரதந்திரியம்** - பிறன் வய மாதல்.
**பாரதர்** - கௌரவ பாண்ட வர்கள்.
**பாரதி** - கலைமகள்; பண்டி தன்; மரககலம.
**பாரதியரங்கம்** - சுடுகாடு.
**பாரபத்தியம்** - மேல் விசா ரணை.
**பாரமார்த்திகம்** - உண்மை ஞானததுக்குரியது
**பாரமேட்டி** - சிறந்த சந்நி யாசி.
**பாரம்** - சுமை; ஒரு நிறை; பொறுப்பு; பெருங் குடும் பம்; கரை; கவசம்; பருததிச செடி.
**பாரம்பரியம்** - பரம்பரை; ஐதிகம்.
**பாராசாரி** - பாரிக்குதிரை.

**பாராட்டுதல்** - புகழ்தல்; அன்பு காட்டுதல்.
**பாராயணம்** - அருள் நூலை நியமமாக ஓதுதல்.
**பாராவளை** - வளைதடி.
**பாராவாரம்** - கடல்; கடற்கரை.
**பாரி** - நல்லாடை; ஒரு வள்ளல்; பூமி; கட்டில்; கள்; மனைவி; சிங்கம்.
**பாரிசம்** - பக்கம்; வசம்; திசை.
**பாரிடம்** - பூமி; பூதம்.
**பாரித்தல்** - சுமையாதல்; சுமத்துதல்; காத்தல; பரவுதல; தோன்றுதல்; வளர்த்தல்; அணிதல்; வளைத்தல்.
**பாறை** - கடப்பாரை; செடி வகை.
**பார்** - வண்டி நெடுஞ்சட்டம்; பூமி; வன்னிலம; பாறை; கட்டு; பருமை.
**பார்க்கவன்** - சுக்கிரன்; பரசுராமன்.
**பார்க்கவி** - திருமகள்; பார்வதி.
**பார்த்தசாரதி** - அருச்சுனனின் தேர்ப்பாகன்; கண்ணன்.
**பார்த்தன்** - அருச்சுனன்.
**பார்த்திபன்** - அரசன்.
**பார்ப்பனன்** - பார்ப்பான்.
**பார்ப்பு** - பறவைக் குஞ்சு.
**பார்மகள்** - பூமிதேவி.
**பார்வல்** - பார்த்தல்; காவல்; பகைவர் வருகை பார்க்கும் அரணுச்சி; பார்வைமிருகம்.
**பார்வை** - பார்த்தல; குனியம; பார்வை மிருகம; மதிப்பு.

**பார்வைவிலங்கு** - விலங்கு பிடிக்கப் பழக்கிய விலங்கு.
**பாலமை** - பிள்ளைமை; அறியாமை.
**பாலம்** - பூமி; நெற்றி; வாராவதி; மழு.
**பாலனம்** - பாதுகாப்பு.
**பாலி** - பாலாறு; ஒரு பழைய மொழி.
**பாலிகை** - காதணிவகை; நவதானிய முளைத்தாழி; உதடு; கத்திப்பிடி.
**பாலை** - மணல்நிலம்; ஒரு மரம்; ஒரு பண்; நீரோட்டம்; இளம்பெண்; பிரிவு; வெப்பம்.
**பால்** - பால்; வெண்மை; சாறு; பகுதி; பக்கம்; குலம்; தன்மை; ஊழ்; பாகுபாடு; நன்னெறி; சாராயம்.
**பால்மாறுதல்** - சோம்பியிருத்தல்; பின்வாங்குதல்.
**பால்வரைதெய்வம்** - ஊழ்.
**பாவகம்** - அக்கினி; கருத்து; தியானம்; தோற்றம்; உருவம்; பரிசுத்தம்; விடகாரி; அபிநயம்; பாசாங்கு; மச்சுவீடு; மனம் முதலியவற்றோடுகூடி நின்று பாவிப்பது.
**பாவகாரி** - பாவஞ்செய்தலையே தொழிலாக வுடையவன்.
**பாவடி** - அங்கவடி.
**பாவலர்** - கவிஞர்.
**பாவறை** - கூடாரம்.
**பாவனன்** - அனுமான்; வீமன்.
**பாவனை** - நினைவு; தியானம்; அபிநயம்; கேட்டவாறு நடத்தல்.

**பாவாடம்** - நாக்கறுத்துக் கொள்ளும் பிரார்த்தனை.
**பாவாடை** - கடைச்சீலை; ஆடையன்னம்.
**பாவாணர்** - பாவலர்.
**பாவாற்றி** - நெய்வார் குச்சு.
**பாவி** - தீமையாளன்; எண்ணுதல்; சாது.
**பாவித்தல்** - எண்ணுதல்; தியானித்தல்; பாவனை செய்தல்.
**பாவை** - பதுமை; பெண்; குரவம்பூ; ஒரு நோன்பு.
**பாழி** - பெருமை; போர்; கோயில்; முனிவர் வாசம்; வலிமை; துயிலிடம்; குகை; பகைவரூர்.
**பாளிதம்** - கண்ட சருக்கரை; பாறசோறு.
**பாளை** - கருப்பருவம்.
**பாளையப்பட்டு** - பாளையக்காரருக்கு விடப்பட்ட கிராமத்தொகுதி.
**பாளையம்** - சேனை; கூடாரம்.
**பாறு** - பருந்து; கழுகு.
**பாறுதல்** - அழிதல்; ஒழுங்கறுதல்; சிதறுதல்; ஓடுதல்; துணிபடல்; நீங்குதல்.
**பாற்பட்டார்** - துறவியர்; நன்முறையில் நடப்பவர்.
**பானகம்** - இனிப்புக் குடிநீர்.
**பானம்** - குடித்தல்.
**பானல்** - கருங்குவளை; மருதவயல்.
**பானள்** - நள்ளிரவு.
**பானு** - சூரியன்; ஒளி.
**பான்மை** - தன்மை; வயம்; இயற்கை; நல்வினைப் பயன்; ஊழ்.

**பாஷாந்தரம்** - அன்னிய மொழி.
**பாஸ்கரன்** - சூரியன்.

## பி

**பிகம்** - குயில்.
**பிக்காரி** - மறுவையாளன்.
**பிக்கு** - சிக்கு; பிசகு; தடை.
**பிக்குணி** - பௌத்தப் பெண் துறவி.
**பிங்கலம்** - பொன்னிறம்; அரிதார நிறம்; வடக்கு; ஒரு நிகண்டு.
**பிங்கலன்** - குபேரன்.
**பிங்கலை** - வலமூக்கு வழிவரும் மூச்சு; பார்வதி.
**பிங்களித்தல்** - அருவருத்தல்; பின்வாங்குதல்.
**பிங்காளம்** - பாத்திரவகை.
**பிங்குசம்** - தலைக்கோலம்.
**பிசகு** - தவறு.
**பிசி** - சோறு; விடுகதை; பொய்; நொடி; பிதிர்.
**பிசிதம்** - இறைச்சி; வேம்பு; நீறு.
**பிசிர்** - நீர்த்துளி; சிம்பு.
**பிசிர்தல்** - துளியாகச் சிதறுதல்.
**பிசுக்கர்** - அற்பர்; உலோபர்.
**பிசுக்கு** - உலோபம்; அற்பம்; பசைத் தன்மை.
**பிசுனம்** - பொய்; கோள்; உலோபம்; காக்கை.
**பிச்சம்** - பீலிக்குஞ்சம்; ஆண் மயிர்.
**பிச்சன்** - சிவன்; மருண்டவன்.
**பிச்சியார்** - சைவத் தவப் பெண்; கலம்பக உறுப்பு ளுதை.

**பிச்சு** - பித்தச் சொரிநீர்; பைத்தியம்.
**பிஞ்சகன்** - சங்கரிப்போன்; சிவன்.
**பிஞ்சம்** - மயிற்றோகை; இறகு.
**பிஞ்ஞகம்** - மகளிர் தலைக்கோலம்.
**பிஞ்ஞகன்** - சிவன்.
**பிஞ்ஞை** - நப்பின்னை.
**பிடகம்** - திரிபிடகம்; (பௌத்தாகமம்); பிச்சை; கூடை.
**பிடகன்** - வைத்தியன்; புத்தன்.
**பிடகை** - பூந்தட்டு.
**பிடர்** - கழுத்து.
**பிடல்** - கதவு.
**பிடவம்** - ஒரு செடி.
**பிடாகை** - உட்கிடை.
**பிடாரன்** - பாம்பு பிடிப்போன்; இசைகாரன்.
**பிடாரி** - காளி.
**பிடி** - குசை; பற்றுகை; கைப்பிடி; உறுதி; பெண்யானை.
**பிடிகை** - வண்டிவகை.
**பிடித்தல்** - கைப்பற்றுதல்; அபிநயம் செய்து காட்டுதல்; ஒட்டிக்கொள்ளுதல்; ஏற்றதாதல்.
**பிடிபாடு** - ஆதாரம்.
**பிடுகு** - இடி.
**பிட்குதல்** - கத்துதல்.
**பிட்சாடனம்** - இரப்பு.
**பிட்டன்** - மதப்புறம்பானவன்.
**பிணங்குதல்** - மாறுபடுதல்; ஊடுதல்; நெருங்குதல்.

**பிணர்** - சருச்சரை ; நால்வகை ஊறுகளுள் ஒன்று ; சுரசுரப்பு.
**பிணவல், பிணவு** - விலங்கின் பெண்; பெட்டை.
**பிணா** - பெண்.
**பிணி** - கட்டு ; நோய்; பின்னல்; துன்பம்.
**பிணிதல்** - சாதல்.
**பிணித்தல்** - சேர்த்துக்கட்டுதல், வசப்படுத்துதல்.
**பிணிப்பு** - பற்று ; பாசம்.
**பிணிமுகம்** - மயில்; கந்தனது யானை ; அன்னம்.
**பிணியகம்** - காவலிடம்.
**பிணை** - கட்டு; உத்திரவாதம்; உடன்பாடு ; பெண்மான ; பூமாலை.
**பிணைதல்** - சேர்தல் ; செறிதல்; புணர்தல்.
**பிணைத்தல்** - கட்டுதல் ; இணைத்தல்.
**பிணையல்** - மாலை.
**பிணையிலி** - பேணப்படாதோன்.
**பிண்டம்** - உருவற்ற கரு ; உடல; சோறறுத் திரள்; தொகுதி.
**பிண்டி** - மா ; வடிவம் ; அசோகம.
**பிண்டிகை** - கடிவாளம்.
**பிண்டித்தல்** - தொகுத்தல்; திரளையாக்குதல்; திரளுதல.
**பிண்டிபாலம்** - எறிபடை வகை.
**பிதக்குதல்** - நசுங்குதல்.
**பிதற்று** - அறிவில்லாப் பேச்சு; குழறுகை.

**பிதாமகன்** - பாட்டன் ; பிரமன்.
**பிதிகாரம்** - பரிகாரம்.
**பிதிர்** - துண்டம்; பொறி ; விடுகதை; சேறு ; பொடி ; தந்தை ; தென்புலத்தார் ; தேமல்; உதித்தல் ; மனங்கலங்குதல்.
**பித்தி** - சுவர் ; பங்கு.
**பித்திகை** - புத்தி; சாதி மல்லிகை; சுவர்.
**பித்து** - பைத்தியம் ; அறியாமை.
**பித்தை** - மக்கள் தலைமயிர் ; ஆண்மயிர் ; குடுமி.
**பிந்து** - துளி ; விந்து.
**பிபீலிகை** - எறும்பு.
**பிப்பலம்** - அரசு; நீர்.
**பிம்பம்** - உருவின சாயை.
**பியல்** - பிடர்.
**பிரகடனம்** - விளம்பரம்.
**பிரகரணம்** - அத்தியாயம்.
**பிரகஸ்பதி** - தேவகுரு.
**பிரகாசம்** - ஒளி.
**பிரகாரம்** - விதம; ஒப்பு.
**பிரகிருதி** - மூலம் ; சுபாவம் ; வேறுபாடுறுதது.
**பிரசங்கம்** - சொற்பொழிவு.
**பிரசண்டம்** - வலிமை ; கடுமை.
**பிரசம்** - பூந்தாது ; தேன ; வண்டு ; தேன்கூடு.
**பிரசவம்** - மகப்பேறு.
**பிரசன்னம்**-காட்சி; மகிழ்ச்சி.
**பிரசாதம்** - அனுக்கிரகம் ; கடவுட்சோறு.
**பிரசாபதி** - பிரமன்.
**பிரச்சாரம்** - பரவச்செய்கை,

**பிரசித்தம்** - வெளிப்படை ; அறிவிப்பு.
**பிரசினம்** - வினா.
**பிரசுரம்** - அறிவிப்பு; நூற பதிப்பு.
**பிரசை** - குடி; சந்ததி.
**பிரடை** - முறுக்காணி.
**பிரட்டம்** - முதன்மை; தள்ளுண்கை.
**பிரணயம்** - அன்பு.
**பிரணவம்** - ஓங்கார மந்திரம்.
**பிரதட்சிணம்** - வலம் வருகை.
**பிரதமம்** - முதன்மை: தொடக்கம.
**பிரதாபம்** - கீர்த்தி; வீரம.
**பிரதானம்** - தலைமை.
**பிரதானி** - மந்திரி.
**பிரதி** - ஒத்த தன்மை; பதில்.
**பிரதிகூலம்** - தீமை ; தடை.
**பிரதிதானம்** - கைமமாறு.
**பிரதிதொனி** - எதிரொலி.
**பிரதிமை** - உருவம்.
**பிரதியுத்தரம்** - மறுமொழி.
**பிரதிவாதி** - எதிராளி.
**பிரதீசி** - மேறகு.
**பிரதேசம்** - இடம்.
**பிரத்தியம்** - காட்சி ; நேரில் அறிவது.
**பிரத்தியட்சம்** - காட்சி.
**பிரத்தியேகம்** - தனிமை.
**பிரபஞ்சம்** - உலகம்.
**பிரபந்தம்** - நூல்.
**பிரபலம்** - வலியுள்ளது ; புகழ்.
**பிரபாகரன்** - சோமன்; சூரியன; அக்கினி.
**பிரபாவம்** - கீர்த்தி ; மேனமை; வலிமை,

**பிரபிதாமகன்** - கொள்பாட்டன.
**பிரபு** - சிறந்தோன்; கொடையாளி.
**பிரபுத்தன்** - விழிப்புள்ளவன்; யுவன்.
**பிரபை** - திருவாசி; ஒளி; தூக்சை.
**பிரபோதம்** - பேரறிவு.
**பிரமகத்தி** - கொலைப்பாவம்.
**பிரமசாரியம்** - ஓதல்நிலை; கலியாணமிலலா வாழ்க்கை.
**பிரமஞானம்** - கடவுளறிவு.
**பிரமதாயம்** - பார்ப்பனர்க்கு இறையிலியாகக கொடுக கும் நிலம.
**பிரமதாளம்** - சச்சரி.
**பிரமம்** - முழுமுதறபொருள்; கலக்கம; சுழல் காற்று; தவறு.
**பிரமரந்திரம்** - உச்சித் துவாரம்
**பிரமரம்** - வண்டு; அபிநய வகை.
**பிரமராக்கதன்** - பார்ப்பாரப் பேய்.
**பிரமராசனர்** - தபோதனர்.
**பிரமராயன்** - பார்ப்பன அமைசசன.
**பிரமாணம்** - அளவு; விதி; ஆணை.
**பிரமாண்டம்** - மிகப்பெரியது.
**பிரமாதம்** - அளவின் மிகக அபாயம; தவறு.
**பிரமிதி** - அளவையால் உணர்ந்த மெய்யுணர்வு.
**பிரமித்தல்** - திகைத்தல்; மயங்குதல்.
**பிரமுகம்** - சிறந்தது.

***பிரமேயம்*** - நியாயமளந்தறி
யப்பட்டது.
***பிரமை*** - மயக்கம்.
***பிரமோதம்*** - பெருமகிழ்ச்சி.
***பிரயாசம்***-முயற்சி; உழைப்பு.
***பிரயோகம்*** - ஏவல் ; செலுத்
துகை; மருந்து.
***பிரயோசனம்*** - பயன்.
***பிரலாபம்*** - புலம்பல்.
***பிரவர்த்தனம்*** - செய்கை.
***பிரவாகம்***-வெள்ளம்; குணம;
தொழில்.
***பிரவாளம்*** - பவளம்.
***பிரவிருத்தி*** - முயற்சி; மலக்
கழிவு.
***பிரவீணன்*** - சமர்த்தன்.
***பிரவேசம்*** - உட்புகுதல் ;
தொடக்கம்.
***பிரளயம்*** - கற்ப முடிவு ;
வெள்ளம்.
***பிரளயாகலர்*** - ஆணவ கன்ம
மலங்களையுடைய ஆன்மாக்
கள்.
***பிரகாரம்*** - கோவில் சுற்றுப்
பிரதேசம்; மதில்
***பிராகிருதம்*** - பிரகிருதி சம்
பந்தம்; வடமொழித் திரிபு.
***பிராசம்*** - எழுத்தோசை
யொற்றுமை.
***பிராசனம்*** - ஊட்டுகை ;
உண்கை.
***பிராசி*** - கிழக்கு ; முன்னுள்
ளது.
***பிராசீனம்*** - பழைமை.
***பிராட்டி*** - தலைவி.
***பிராணன்*** - உயிர்.
***பிராணாயாமம்*** - உயிர்ப்படக்
குதல்,

பிராதா - சகோதரன்; அண்ணன்.
பிராத்தி - பேறு; பயன்; பிராப்தி.
பிராந்தி - மயக்கம்.
பிராமி - சரசுவதி; எழுத்து வகை.
பிராயச்சித்தம் - கழுவாய்.
பிராயம் - நிலை; வயது.
பிராரத்தம் - பழவினை.
பிரார்த்தனை - வேண்டுகோள்.
பிரான் - தலைவன்.
பிரி நிலை - வேறுபடுத்திக் காட்டும் நிலை
பிரியம் - விருப்பம்; அருமை.
பிரீதி - விருப்பம்; அன்பு.
பிருகுடி - புருவம்.
பிருடை - சுழலாணி.
பிருதிவி - பூமி; மண்.
பிருதை - குந்திதேவி.
பிருத்தியன் - அடிமை.
பிருந்தம் - துளசி.
பிரேதம் - பிணம்.
பிரேரணை - முதலெடுத்துக் கூறல்.
பிரை - உறைமோர்; பயன்.
பிலம் - பாதாளம்; கீழறை.
பிலிற்றுதல் - தூவுதல்; வெளிவிடுதல்.
பிலுக்கு - பகட்டு.
பில்குதல் - சிறுதுவலை வீசுதல்; பொசிதல்; வழிதல்.
பில்லி - சூனியவகை; பூனை.
பிழக்கு - பிழை.
பிழம்பு - திரட்சி; உடல்; கொடுமை; வடிவு.
பிழா, } - இறைகூடை; கொள்
பிழார் } கலம்.
பிழி - கள்.

**பிழுக்கை** - ஆடு முதலியவற்றின மலம்.
**பிழைத்தல்** - உய்தல்; தவறுதல்; நீங்குதல்.
**பிளவை** - இராஜகட்டி; வெடிபுண்; பிளக்கப்பட்ட துண்டு.
**பிளிச்சு** - பிளப்பு.
**பிளிர்த்தல்** - கொப்பளித்தல்.
**பிளிறுதல்** - முழங்குதல்; கிண்டுதல்.
**பிளிற்றுதல்** - ஆரவாரித்தல்; வெகுளுதல்; கக்குதல்.
**பிள்ளுதல்** - பிளவுண்டாதல; துண்டுபடுதல்; விள்ளுதல்; நொறுக்குதல்.
**பிள்ளை** - பறவைக் குஞ்சு; இளமை.
**பிள்ளைத்தமிழ்** - பிள்ளைப் பருவங் கூறும் பிரபந்தம்.
**பிறகிடுதல்** - பின்புறமணிதல; தோற்றல்; கழிதல்; பின்வாங்குதல்.
**பிறக்கம்** - ஒளி; உயர்ச்சி; குவியல்.
**பிறக்கிடுதல்** - பின்வாங்குதல்; பின்னிகழ்தல்.
**பிறக்கு** - முதுகு; பின்; அடுக்கு; வேருக.
**பிறக்குதல்** - அடுக்குதல்.
**பிறங்கடை** - வழித்தோன்றல்.
**பிறங்கல்** - உயர்ச்சி; சிறுமலை; திரள்; பெருமை; விளக்கம்; ஒளி; அரசன்.
**பிறங்குதல்** - விளங்குதல்; உயர்தல்; சிறத்தல்; நிலைமாறுதல்; செறிதல்; பெருத்தல்; ஒலித்தல்.

பிறந்தை - பிறவி; பிறந்தகம்; சுபாவம்; துன்பம்.
பிறழ்தல் - மாறுபடுதல்; துள்ளுதல்; விளங்குதல்; முரிதல்; திகைத்தல்; நடுங்குதல்; இறந்துபடுதல்.
பிருண்டு - பிறஇடம்; நகத் தாற கீறு.
பிறிது - வேருனது.
பிறை - இளஞ்சந்திரன்; மகளிர் தலையணி வகை; வளைவு.
பிறைக்கை - அபிநய வகை.
பிறையிரும்பு - அரிவாள்.
பிறைவடம் - சந்திரஹாரம்.
பிற்றைநிலை - வழிபாட்டு நிலை; பிற்பட்டநிலை.
பினுகம் - சிவன் வில்.
பினுகினி - பெண்ணையாறு.
பின்றுதல் - பின்னிடுதல்; மீளுதல்; மாறுபடுதல்.
பின்றை - பின்னுள்; பின்பு.
பின்னகம் - பின்னின மயிர்; குஞ்சி; பேதம்.
பின்னணை - வீட்டுக்கொல்லை.
பின்னம் - சிதைவு; கீழ்வா யிலக்கம்.
பின்னிலை - வழிபடல்; தாழ்ந்து நிற்றல்.
பின்னை - தங்கை; நப்பின்னை.
பிக்ஷாடனம் - பிச்சைக்காரக் கோலம்.
பிக்ஷீ - சந்நியாசி.
பிக்ஷை - பிச்சை.

## பீ

பீக்கலாட்டம் - தொந்தரை; தடை.
பீசம் - மூலம்; விதை.

**பீடம்** - மேடை; இருக்கை.
**பீடிகை** - முனிவரிருக்கை; தேர்த்தட்டு; பூந்தட்டு.
**பீடிகைத்தெரு** - கடைவீதி.
**பீடிப்பு** - துன்பம்.
**பீடு** - பெருமை; வலிமை; ஒப்பு.
**பீடை** - துன்பம்.
**பீதன்** - குடிப்பவன்; அஞ்சு பவன்; சூரியன்.
**பீதாம்பரம்** - பொன்னுடை
**பீபற்சு** - அருச்சுனன்.
**பீமம்** - அச்சம்; பருமை.
**பீரம்** - தாய்ப்பால்; வீரம்; பீர்க்கு.
**பீரை** - பீர்க்கு.
**பீர்** - பீர்க்கு; பசலை நிறம்; பெருக்கு; அச்சம்.
**பீலி** - மயிற்றோகை; சிறு சின்னம்; விசிறி; பனங் குருத்து; மதில்.
**பீலிக்குஞ்சம்** - அலங்காரத் தொங்கல்.
**பீழித்தல்** - வருத்துதல.
**பீழை** - துன்பம.
**பீழ்தல்** - பிடுங்குதல்.
**பீழ்** - கரு; சூல்; தானியக் கரு.
**பீள்** - கரு; இளங்கதிர்.
**பீறல்** - கிழிக்கை.
**பீறுதல்** - கிழிதல்; கிழித்தல்; பிளத்தல்.
**பீற்றல்** - கந்தை.
**பீனை** - கண்ணழுக்கு.
**பீனசம்** - மூக்கடைப்பு நோய்.
**பீனம்** - பருமை; பெருமை.

# பு

**புகடுதல்** - வீசியெறிதல்.
**புகட்டுதல்** - ஊட்டுதல; அறிவுறுத்துதல்; உட்புகுத்துதல்.
**புகரோன்** - சுக்கிரன்.
**புகர்** - கபிலநிறம்; ஒளி; அழகு; புள்ளி; கறை; குற்றம்.
**புகர்முகம்** - யானை; ஒரு பாணம்.
**புகலி** - புதுக்குடி; சீகாழி.
**புகலிடம்** - தஞ்சம்; இருப்பிடம்; ஊர்.
**புகலுதல்** - சொல்லுதல; விருமபுதல்; தெரிதல்; ஒலித்தல்; மகிழ்தல்.
**புகல்** - விருப்பம; கொண்டாடுகை; வெற்றி; புகழ்; புகுகை; இருப்பிடம்; துணை; சரண்; பற்றுக்கோடு; உபாயம்.
**புகல்வி** - விலங்கின் ஏறு.
**புகல்வு** - மனச்செருக்கு; விருப்பம்.
**புகவு** - உணவு; புகுகை; மேலேறுகை.
**புகழாவாகை** - அகத்தி; அகங்காரம்.
**புகழ்க்கூத்து** - கூத்துவகை.
**புகழ்பொருள்** - உபமேயம்.
**புகழ்மை** - புகழ்; புகழுடைமை.
**புகற்சி** - விருப்பம்; காதல்.
**புகற்றுதல்** - விரும்பச் செய்தல்.
**புகா** - உணவு.

**புகார்** - ஆற்றுமுகம் ; கழி முகம் ; காவிரிப்பூம்பட்டினம்.
**புகுதி** - சம்பவம் ; ஆழ்ந்தறியும் நுண்ணறிவு : வழி ; மனைவாயில்; வருவாய்.
**புகுதுதல்** - பிரவேசித்தல் ; நிகழ்தல்.
**புகை** - ஒரு யோசனை தூரம் ; துக்கம்.
**புகைக்கொடி** - தூமகேது.
**புக்கில்** - தங்குமிடம் ; வீடு ; புகலிடம்: உடம்பு.
**புங்கம்** - உயர்ச்சி ; மெல்லாடை; சிறுதுகில்; அம்பு ; குவியல்.
**புங்கவம்** - இடபம் ; நந்தி ; உயர்ச்சி.
**புசல்** - பெருங்காற்று ; குச்சுமட்டை.
**புசிப்பு** - உண்ணுகை ; நுகர்ச்சி.
**புஞ்சம்** - திரட்சி; கூட்டம்.
**புஞ்சவனம்** - கருப்பச் சடங்கு.
**புஞ்சுதல்** - ஒன்றுசேர்தல்.
**புடகம்** - இலைத்தொன்னை ; தாமரை.
**புடம்**-எரித்துப் பக்குவப்படுத்துகை ; கண்ணிமை ; மூடி.
**புடவி** - பூமி.
**புடாயம்** - மாணிக்கக் குற்றவகை.
**புடை** - பக்கம்; முறை ; அடித்தல்; பகுதி; ஒலி.
**புடைத்தல்** - முறத்திலிட்டுத் தட்டுதல் ; அடித்தல் ; துவைத்தல் ; நீந்துதல்; வீங்குதல்; ஆரவாரித்தல்.

புடைநூல் - சார்பு நூல்.
புடைபெயர்தல் - வெளி யேறுதல்; நிலைமாறுதல்.
புடைப்பெண்டிர் - வைப் பாட்டிகள்.
புடையல் - மாலை.
புட்கரிணி - தாமரைத் தடா கம; கோவில்வாவி; பெண் யானை.
புட்கலம் - பூரணம் ; பிச்சை யுணவு; உடம்பு.
புட்டகமண்டபம் - கூடாரம்.
புட்டகம் - புடைவை.
புட்டி - குப்பி ; சிறுபடி ; பருமை ; இடை.
புட்டில் - அமபறுத் தூணி; விரலுறை; கூடை; குதிரை யுணவுகட்டும பை ; கெச்சை யணி; தக்கோலக்காய்.
புட்பகம் - புட்பக விமானம் ; குபேர விமானம்.
புட்பகாசம் - விமானக் கோயில்.
புட்பம் - மலர் ; வாழை.
புட்பவதி - பூப்படைந்த பெண்.
புட்பவருடம் - மலர்மழை.
புட்பாகன் - திருமால்.
புட்பாஞ்சலி - பூவிட்டு வணங்கல்.
புணரி - சேர்க்கை ; கடல் ; அலை.
புணரியோர் - ஒன்று கூட் டியவர்.
புணர்ச்சி - சேர்க்கை; எழுத் துச் சந்தி.
புணர்தல் - இயைதல் ; சேர் தல் ; மேற்கொள்ளுதல் ; ஏற்றதாதல்; கூடியதாதல்.

**புணர்த்தல்** - செய்தல்; பாகு படுத்துதல்; கட்டுதல்; உண் டாக்குதல்.
**புணர்ப்பு** - செயல் ; சூழ்ச்சி ; மாயம்; நட்பு; துணை.
**புணை** - ஆதாரம்; தெப்பம் ; ஒப்பு; உதவி.
**புண்** - காயம் ; வடு ; ஊறு ; தசை.
**புண்டரம்** - நெற்றிக்குறி ; கழுகு.
**புண்டரிகம்** - தாமரை ; வண்டு; புலி.
**புண்டரிகன்** - திருமால்.
**புண்ணியதிசை** - வடதிசை.
**புண்ணியம்** - நல்வினை ; நல் வினைப்பயன்.
**புண்ணியன்** - கடவுள் ; சிவ பிரான்.
**புண்ணியாக வாசனம்** - தூய் மைச்சடங்கு.
**புண்ணீர்** - இரத்தம்.
**புண்வழலை** - புணசீழ்.
**புதல்** - புதர்; தூறு; அரும்பு ; புருவம்.
**புதல்வன்** - மகன் ; மாணுக் கன்.
**புதவம்** - வாயில ; கதவு ; அறுகு.
**புதவு** - வாயில்; கதவு; மதகு.
**புதற்பூ** - நிலப்பூ.
**புதன்** - வானவன்.
**புதா** - கதவு; பெருநாரை.
**புதினம்** - நூதனம்; அதிசயம்.
**புதுக்குதல்** - புதுப்பித்தல்; அலங்கரித்தல்.
**புதுக்குப்புறம்**- அறநிலையம்; புதுப்பிக்கவைத்த தரும சொத்து.

புதுநிறை - புதுவெள்ளம்.
புதுமை - அற்புதம்; அபூர்வம; பழக்கமின்மை; எழில்.
புதுவது - புதிது.
புதை - அம்புக்கட்டு; அம்புகூடு; மறைவிடம்; புதைபொருள்; உடல்.
புதையல் - புதைபொருள்.
புத்தகம் - மயிலிறகு; நூல்.
புத்திகோசரம் - புத்திக்குப் பொருளாவது.
புத்திபூர்வம் - மனமறிந்தது.
புத்திமதி - அறிவுறுத்துகை.
புத்திரகாமேட்டி - மகப்பேற்று யாகம்.
புத்தேள் - புதுமை; தெய்வம்; தேவர்.
புத்தோடு - புதுப் பானை.
புந்தி - மனம்; அறிவு; புதன்.
புமான் - ஆண்மகன்; ஆன்மா.
புயக்கறுதல் - வெளியேறுதல்; பசுமை யறுதல்.
புயங்கம் - பாம்பு.
புயங்கன் - சிவபிரான்.
புயமுட்டி - அம்பெய்யும்வகை.
புயம் - தோள்.
புயலேறு - இடி.
புயல் - மேகம்; கடுங்காற்று; நீர்.
புய்தல் - பறிக்கப்படுதல்; மறைதல்.
புய்த்தல் - பிடுங்குதல்; பறித்தல்; பயத்தல்.
புரசை - புரோசை.
புரட்டு - வஞ்சகம்; மாறுபட்ட பேச்சு.
புரணம் - அசைகை; துடிக்கை; தோன்றுகை; ஒளி; மயக்கம்.

**புரத்தல்** - காத்தல்; அருளல.
**புரந்தரன்** - இந்திரன்.
**புரம்** - ஊர்; நகரம; கோயில்; வீடு; உடல.
**புரவலன்** - அரசன்; பாதுகாப்பவன்; கொடையாளன.
**புரவி** - குதிரை; குதிரை, யானை கட்டுமிடம்.
**புரவு** - பாதுகாப்பு; கொடை; அரசிறை; இறையிலிநிலம; ஆறறு நீர் பாயும் வயல்; செழுமை; நிலவரி.
**புரளி** - இரத்தம்; பொய; சண்டை.
**புராணம்** - பழமை; பழங்கதை; பழைய நிகழசசி.
**புராதனம்** - பழமையானது.
**புரி** - கயிறு; முறுக்கு; சுருள்; யாழநரம்பு; நகர்; மருத நிலத்தூர்; உடல்; விருப்பம்; சங்கு; மாலை.
**புரிக்கூடு** - நெறகூடு.
**புரிசை** - மதில.
**புரிதல்** - தியானித்தல்; கொடுத்தல; விசாரணை செய்தல்; சொல்லுதல்; மிகுதல்; அசைதல்; விருமபுதல்; பொருள் விளங்குதல்; எப்பொழுதும மேறகோடல்.
**புரிப்பித்தல்** - வளைந்து திரும்பச் செய்தல.
**புரித்தல்** - நிறைத்தல; பதித்தல்; விருமபச் செய்தல.
**புரிமுகம்** - கோபுரம; சங்கு.
**புரியட்டகம்**-சூட்சும சரீரம.
**புரிவு** - அன்பு; விருப்பம்; தொழில்; தவறு; தெளிவு.
**புரீடம்** - அழுக்கு; மலம்.

**புரு** - பருமை; மிகுதி; குழந்தை.
**புருகூதன்** - இந்திரன்.
**புருடன்** - புருஷன்; ஆண் மகன்; ஆன்மா; கணவன்.
**புருவை** - ஆடு; பெண்ணாடு.
**புருஷகாரம்** - ஆண்தன்மை.
**புருஷார்த்தம்** - அறம் பொருளின்பம் வீடு.
**புரூரம்** - புருவம்.
**புரை** - உட்டுளை; குரல்வளை; விளக்குமாடம்; குற்றம்; பொய்; இலேசு; கூறுபாடு; உயர்வு; வீடு; ஆச்சிரமம்; தேவாலயம்; அறை; பக்கம்; (ஓர் உவம உருபு).
**புரைசை** - புரோசை.
**புரைதல்**-ஒத்தல்; பொருந்துதல்; மறைத்தல்; நேர்தல்; தைத்தல்.
**புரைத்தல்** - பெருமையாதல்; குற்றப்படுதல்; மறைவு வெளிப்படுதல்; தப்புதல்.
**புரையோர்** - மெய்ப்பொருளுணர்ந்தோர்; பெரியோர்; காதல் மகளிர்.
**புரோகம்**-நாய்; முன்செல்லல்.
**புரோகிதன்** - சடங்கு செய்விப்போன்; ஊர்ச்சோதிடன்; இந்திரன்.
**புரோசர்** - குறுநில மன்னர்.
**புரோசு** - சடங்கு செய்விக்கும் குரு.
**புரோசை** - யானைக்கழுத்திடு கயிறு.
**புரோட்சணம்** - மந்திர நீர் தெளிக்கை.
**புரோதம்** - குதிரை மூக்கு.

**புரோதாயம்** - தூய்மை நீர்க் குளிக்கை.
**புரோவாதம்** - பொருளை முன்னர்க் கூறுவது.
**புலங்கொளல்** - அறிதல்.
**புலத்தகை** - ஊடல்.
**புலத்தல்** - மனம் வேறுபடுதல்; துன்புறுதல; அறிவுறுத்தல்; வெறுத்தல்; ஊடல்.
**புலத்தி** - வண்ணாத்தி.
**புலத்தோர்** - ஞானியர்.
**புலநெறி வழக்கம்**-செய்யுள் வழக்கு.
**புலப்பகை** - ஐம்புலனடக்கல்.
**புலப்பம்** - பிதற்று; அலப்பு.
**புலமகள்** - கலைமகள்.
**புலமகன்** - புலமையுள்ளவன்.
**புலமங்கை** - பூமிதேவி.
**புலமை** - கல்வி ; மெய்ஞ்ஞானம்.
**புலம்** - வயல்; இடம்; திசை; திக்கு; நாடு; மெய்யுணர்வு ; அறிவு; துப்பு; நூல்.
**புலம்பன்** - நெய்தனிலத் தலைவன்; ஆன்மா.
**புலம்பு** - அழுகையொலி ; தனிமை; பிரிவு ; குற்றம் ; வருத்தம்; வெறுப்பு; கடற்கரை.
**புலம்பெயர்மாக்கள்** - அயல் நாட்டினர் ; கடலோடிகள்.
**புலரி** - விடியல்; சூரியன்.
**புலர்தல்** - உலர்தல் ; வாடுதல்; விடிதல்; தெளிதல் ; முற்றல.
**புலவல்** - வெறுப்பு.
**புலவன்** - அறிஞன; புத்தன் ; ஆன்மா ; புதன் ; முருகன் ; தேவன்.

புலவி - ஊடல்; வெறுப்பு.
புலவு - புலால; புலால் நாற்றம்; இரத்தம்.
புலவுதல் - புலால் நாற்றமடித்தல்; வெறுத்தல்.
புலனுழுதுண்மார் - கற்ருேர்.
புலன் - அறிவு; ஐம்புலன்; காட்சி; வயல்.
புலாகம் - சோற்றுப்பருக்கை.
புலால் - ஊன்; தீநாற்றம்.
புலிங்கம் - தீப்பொறி.
புலிமுகப்பு - அரண்மனை வாயில்.
புலை - ஊன்; இழிவு; கேடு; தீயநெறி; பொய்; கீழ்மகன்; தூய்மையின்மை.
புல் - திரணசாதி; பனை; புல்லரிசி; இழிவு.
புல்குதல் - புணர்தல்; தீண்டுதல்; தழுவுதல்.
புல்லகம்-மகளிர் நெற்றியணி.
புல்லணல் - இளந்தாடி.
புல்லம்-எருது; வசைமொழி; பூ.
புல்லார் - பகைவர்.
புல்லார்தல் - தோல்வியுறுதல்.
புல்லாள் - புல்லுரு; ஆறலை கள்வன.
புல்லி - புறவிதழ்; பூவிதழ்.
புல்லிகை - கன்னசாமரை.
புல்லிதழ் - பூவின் புறவிதழ்.
புல்லினம் - ஆட்டினம்.
புல்லுதல் - தழுவுதல்; பொருந்துதல்; வரவேற்றல்; ஒத்திருத்தல்.
புல்லெழுதல் - மக்கள் நடமாட்டமினமை.
புல்வாய் - கலைமான்.

**புவம்** - வான்.
**புவனம்** - பூமி; உலகம்; நீர்; ஆகாயம்.
**புவன்** - இறைவன்.
**புவி** - பூமி.
**புழகு** - மலையெருக்கு.
**புழக்கம்**-பழக்கம; அறிமுகம்.
**புழங்குதல்**-கையாளுதல்.
**புழல்**-உட்டுளை; பணியாரம.
**புழல்வல்சி** - தேங்குழல்.
**புழுகு** - ஒரு மணப்பொருள்; அம்புத்தலை.
**புழுக்கம்** - துன்பம்; உஷ்ணம.
**புழுக்கல்**-அவித்தது; சோறு.
**புழுக்கு**-கும்மாயம்; இறைச்சி.
**புழுக்கை** - இழிந்தவன; அடிமை.
**புழுக்குதல்** - ஆவியெழ வேகு தல; பொருமைபபடுத்து தல்; வருத்துதல்; சினத்தல்.
**புழுதி** - காய்ந்த நிலம்.
**புழுதிபாடு** - தரிசு நிலம்.
**புழுவெட்டு** - கூந்தல் நோய் வகை.
**புழை** - துளை; சிறுவாயில்; காட்டுவழி; ஒடுக்கவழி; சாளரம்; ஏவறை; நரகம்.
**புழைக்கடை** - வீட்டுப் பின் புறம்.
**புழைத்தல்** - துளையிடுதல்.
**புளகம்** - மயிர் சிலிர்க்கை; கண்ணாடி.
**புளிஞன்** - வேடன்.
**புளிதம்** - ஒருவகை புணவு.
**புளிந்தன்** - புளிஞன்.
**புளிமிதவை** - புளிங்கூழ்.
**புளினம்** - மணறகுன்று.
**புளைதல்** - அலங்கரிககப்படு தல்.

**புள்** - பறவை; வண்டு; நிமித்தம்; கைவளை.

**புள்ளம்** - கொடுவாள்.

**புள்ளி** - ஆய்தவெழுத்து; மெய்யெழுத்து; இமயமலை; பொட்டுக்குறி.

**புள்ளுவம்** - பறவையோசை; வஞ்சகம்.

**புறகு** - புறம்பானவன்.

**புறக்கடை** - வீட்டின் பின்புறம்.

**புறக்கணித்தல்** - அலட்சியஞ்செய்தல்; பராமுகமாதல்.

**புறக்கரணம்** - வெளியுறுப்பு.

**புறக்கிடுதல்** - புறங்காட்டல்.

**புறக்கு** - வெளிப்புறம்.

**புறக்குடி** - நகர்க்கு வெளியேயுள்ள ஊர்.

**புறக்குடை** - முதுகு.

**புறக்கூத்து** - கூத்துவகை.

**புறக்கொடை** - புறங்காப்பு; பிரிந்தநிலை; புறமுதுகிடுகை; மெய்காவல்; கோயிலின் வெளிப்புறம்.

**புறங்காடு** - இடுகாடு; சுடுகாடு.

**புறங்காத்தல்** - பாதுகாத்தல்.

**புறங்கூறுதல்** - காணாவிடத்துப் பழிகூறுதல்.

**புறஞ்சிறை** - அருகிடம்; வேலிப்புறம்.

**புறணி** - புறங்கூறல்; மேற்பட்டை; முல்லைநிலம்.

**புறத்திணை** - அரசர் போரொழுக்கம்

**புறத்திறுத்தல்** - முற்றுகையிடுதல்; வெளியே காத்திருத்தல்.

**புறந்தருதல்** - பாதுகாத்தல்; போற்றுதல்.

**புறப்பற்று** - எனதென்பது; மமகாரம

**புறமுழவு** - பறைவகை.

**புறம்** - புறத்திணை; முதுகு; பக்கம்; இறையிலி நிலம.

**புறம்பணை** - மருதநிலம்; முலலை குறிஞ்சி நிலஙகள்.

**புறம்பு**-வெளியிடம், முதுகு.

**புறவம்** - சிறு காடு; சீகாழி

**புறவாழி** - பெரும்புறக கடல.

**புறவு** - புறா; காடு; முல்லை நிலம; முலலைக்கொடி.

**புறவுரை** - பாயிரம.

**புறனடை** - விதியில அடங்காதது.

**புறனழித்தல்** - புறங்கூறல்.

**புறனுரை** - வெறறுரை.

**புற்கம்** - புலலறிவு; புனமை; குறைவு; மாயம.

**புற்கலம்** - சரீரம்; உயிரற்றது.

**புற்கலன்** - ஆன்மா.

**புற்கை** - கஞ்சி; சோறு; கூழ்.

**புற்புதம்** - நீர்க்குமிழி.

**புற்குஞ்சோறு** - புறறுக் கறையான் திரள்; பூஞ்சணம.

**புற்று** - புரைவைத்த புண்.

**புனகம்** - உணவு.

**புனம்** - மலைசார் கொலலை.

**புனலி** - மோசி மல்லிகை.

**புனல்** - நீர், ஆறு.

**புனனாடன்** - சோழன.

**புனிதம்** - தூயமை.

**புனிறு** - ஈன்றணிமை.

**புனுகு** - புழுகு.

**புனைசுருட்டு** - மோசம்.

புனைதல் - தரித்தல் ; அழகு செய்தல; சிறப்பித்தல்; கற பித்தல்; கட்டுதல்.
புனைந்துரை - பாயிரம்.
புனையல் - மாலை.
புனையிறும்பு - செய்காடு.
புனைவிலி - உவமானப் பொருள்.
புனைவுளி - உவமேயப் பொருள்.
புன்கண் - துன்பம் ; வறுமை; அச்சம; இழிவு.
புன்கம் - சோறு; மரவகை.
புன்கூர்தல் - வருந்துதல.
புன்செய் - கொல்லை நிலம்.
புன்முறுவல் - புன்சிரிப்பு.
புன்மூரல் - புன்சிரிப்பு.
புன்மை - இழிவு ; சிறுமை; துனபம்; வறுமை ; குறறம்; மங்கல.
புன்றலை - இளந்தலை; சிவப்பு மயிருள்ள தலை.
புன்னம்புலரி - வைகறை.
புன்னுகம் - புன்னை ; வெள் ளாமபல்.
புன்னுநர் - இழிவறிவாளர்.
புன்னெறி - தீயவழி; பொய்ச் சமயம்.

## பூ

பூ - மலர்; நிறம்; பொலிவு ; அழகு ; புகர் ; கூர்மை; பூமி ; தாமரை ; பட்டம் ; பிறப்பு.
பூகண்டகர் - அசுரர்.
பூகதர் - புகழ்வோர்.
பூகம் - கமுகு ; ஒரு சாதிக் கூட்டம; திரட்சி; இருள்; நேரம்; பிளப்பு; கமுகு.

**பூகம்பம்** - பூமியதிர்ச்சி.
**பூக்கவர்ந்துண்ணி** - குரங்கு.
**பூங்கலன்** - பூக்குடலை.
**பூங்கா** - பூஞ்சோலை.
**பூசந்தி** - கடல்பிரிக்கும் சிறு நிலம்.
**பூசல்** - போர்; பேரொலி; பலரறிகை; வருத்தம்; ஒப்பனை.
**பூசறுத்தல்** - வாய் முதலியன கழுவல்.
**பூசனை** - நித்திய பூசை.
**பூசிதம்** - வணக்கம்.
**பூசுதல்** - தடவுதல்; கழுவுதல்; இயைதல்.
**பூசுரன்** - அந்தணன்.
**பூசை** - பூனை; ஆராதனை; கெட்டி.
**பூச்சிதம்** - மதிப்பு.
**பூச்சியம்** - நன்கு மதிப்பு; ஒன்றுமின்மை.
**பூஞை** - பூனை.
**பூடணம்** - ஆபரணம்.
**பூடு** - பூண்டு.
**பூட்கை** - மனவுறுதி; மேற்கோள்; வலிமை; சிங்கம்; யானை.
**பூட்சி** - ஆபரணம்; உடல்; புணர்ப்பு; உறுதி; வரிவகை.
**பூட்டகம்** - வீணபெருமை; வஞ்சகம்.
**பூட்டன்** - பாட்டன் தந்தை.
**பூட்டை** - ஏற்றமரம்; இராட்டினத்தின் சக்கரம்.
**பூணாரம்** - ஆபரணம்.
**பூணி** - மாடு; நீர்ப்பறவை வகை.
**பூணித்தல்** - தோற்றுவித்தல்; குறிப்பிடுதல்.

**பூணிப்பு** - ஆசை; நீர்மாமை.
**பூணுதல்** - மேற்கொள்ளுதல்.
**பூணூல்** - பூணுநூல்.
**பூண்** - அணி; வளையம்; கிம்புரி; கவசம்.
**பூதகாலம்** - இறந்தகாலம்.
**பூதசதுக்கம்** - நாற்சந்தி.
**பூதசரீரம்** - தூலவுடம்பு.
**பூதத்தயை** - உயிரன்பு.
**பூதநாதன்** - சிவபிரான்.
**பூதம்** - பஞ்சபூதம்; பூதகணம்; பிசாசம்.
**பூதரம்** - மலை; மேரு
**பூதரோதரம்** - மலைக்குகை.
**பூதி** - செல்வம்; திருநீறு; பொன்.
**பூதிசாதனம்** - சிவசின்னங்கள்.
**பூத்தல்** - தோன்றுதல்; மலர்தல்.
**பூநாகம்** - நாகபூச்சி; நாங்கூழ்.
**பூநீர்** - உவர் மண்ணீர்; அரக்கு நீர்.
**பூநீறு** - உவர்மண்
**பூந்துராய்** - சீகாழி.
**பூபதி,** } - அரசன்.
**பூபன்** }
**பூபாலன்** - அரசன்; வேளாளன்.
**பூமன்** - பிரமன்; காமன்; அரசன்; செவ்வாய்.
**பூம்பிடகை** - பூங்கூடை.
**பூம்பொருக்கு** - வாடற்பூ.
**பூரகம்** - மூச்சை உள்ளிழுத்தல்; நிரப்புகை.
**பூரணம்** - நிறைவு; முழுமை.
**பூரணை** - நிறைவு.

**பூரப்பாளை** - தலைக்கோலத்தின் ஓர் உறுப்பு; சபதம் செய்தல்; நிரமானித்தல்.

**பூரம்** - வெள்ளம்; நிறைவு; கற்பூரம்; பூரான்; பொன.

**பூராயம்** - ஆராய்வு; இரகசியம்.

**பூரி** - மிகுதி; பொன்; குற்றம்; நாண.

**பூரிகை** - ஊதுகுழல்.

**பூரித்தல்** - நிறைதல; பூரகம் செய்தல; பருத்தல்; பொலிதல.

**பூரிப்பு** - நிறைவு; மிக மகிழ்ச்சி.

**பூரிமம்** - தெருவின் சிறகு; சாந்திட்டுக் கட்டிய தொட்டி.

**பூரியர்** - கீழ்மக்கள்.

**பூருவபக்கம்** - விடயமும பிறவுமாகச் சித்தாந்த விரோதமாய்ப் பிராற் கூறப்பட்ட வாக்கியம.

**பூருவம்** - பழமை; கிழக்கு.

**பூரை** - போதியது; உதவாதது.

**பூர்வம்** - ஆதி; கிழக்கு; முதன்மை.

**பூர்வீகம்** - முற்காலம்.

**பூர்வோத்தரம்** - வரலாறு; வடகிழக்கு.

**பூல், பூலா** - செடிவகை.

**பூவல்** - செம்மண்; பூந்திடுகை.

**பூவல்லிகொய்தல்** - பூக் கொய்தாடும மகளிர் விளையாட்டு.

**பூவன்** - பிரமன.

**பூவாப்பூ** - பொற்பூ.

**பூவிலி** - பிறப்பற்றவன.

**பூவிலை** - விலைமாதர் பெறும அற்றைக்கூலி.
**பூவை** - காயாமரம் ; நாகண வாய்ப்புள் ; பெண்.
**பூழி** - புழுதி ; விபூதி; குழை சேறு; தூள்.
**பூழியன்** - பாண்டியன் ; சேரன.
**பூழில்** - அகில்; பூமி.
**பூழை**-சிறுவாயில; துவாரம்.
**பூழ்** - காடை; காணுங்கோழி; துவாரம்.
**பூழ்க்கை** - யானே.
**பூனை** - இலவு ; செடிவகை; வெற்றிபபூ.
**பூனதம்** - பொன்.
**பூன்றம்** - பூர்ணம்.
**பூஷிதம்** - அலங்காரம்.

## பெ

**பெகுலம்** - பல.
**பெங்கு** - கள்; தீயொழுக்கம்.
**பெட்டகம்**-வரிசைப்பெட்டி.
**பெட்டல்** - மிக விரும்பல.
**பெட்டன்** - பொய்யன்.
**பெட்டு** - பொய ; வீண் பெருமை; விருப்பம; பேணுகை.
**பெண்டு** - மனைவி ; பெண்.
**பெண்ணருங்கலம்** - பெண் களிற் சிறந்தவள்.
**பெண்ணலம்** - பெண்மைக் குணம்; பெண்ணின்பம்.
**பெண்ணை** - பனை; ஓர் ஆறு.
**பெண்மை** - பெண்தன்மை ; நிறை; அடக்கம; கறபு.
**பெண்வழிச்சேறல்** - மனைவி விருப்பத்தின்படி யொழு கல்.

**பெதும்பை** - பெண்.
**பெத்தகாலம்** - மலப்பிணிப் புண்டு நிற்கும காலம்.
**பெத்தம்** - பாசபந்தம்.
**பெத்தரிக்கம்** - பெருமை ; கருவம்; குழப்பம்.
**பெம்மான்** - பெரியோன் ; கடவுள்.
**பெயரன்** - மகன் மகன.
**பெயரேடு** - பேரேடு.
**பெயர்** - ஆள் ; பொருள் ; வஞ்சினம்; புகழ்; பெயர்ச் சொல் ; வடிவு.
**பெயர்தல்** - போதல் ; பிறழ தல்; மீளுதல்; மாறுதல் ; சிதைவுறல ; அசைவிடுதல ; விடுதல; சலித்தல்; கிளர் தல்.
**பெயர்த்தல்** - போக்குதல் ; நிலைமாறச் செயதல், பிடுங் குதல; கொடுத்தல; பிரித தல, செலுத்துதல; ஒடுங்கிக கொள்ளுதல.
**பெயர்போதல்** - புகழடை தல்.
**பெயர்வழி** - ஆள் ; தலை முறை.
**பெயல்** - மழை ; மேகம்.
**பெய்தல்** - இடுதல ; பொழி தல்; வாாதல; இடைச செருகுதல் ; பரப்புதல , அணிதல் ; செறித்தல் ; வீசி எறிதல்; அமைத்தல்; வரை தல்; பயனபடுத்துதல்; கட்டு தல்.
**பெய்துரை** - பாயிரம ; இடைப்பெயதுரைபபது.
**பெய்வளை** - பெண்.
**பெரியதனம்** - மேட்டிமை.

பெரியபுராணம் - அறுபத்து மூவா வரலாறு.
பெருகியல் - பண்வகை.
பெருகுதல் - அளவு மிகுதல்; நிறைதல்; முதிர்தல; கேடுறுதல.
பெருக்கம் - வெள்ளம்; செல்வம்; நிறைவு.
பெருக்குதல் - விரியச்செய்தல்; நிரப்புதல்; தூற்றுதல்.
பெருங்கரம் - கோவேறு கழுதை.
பெருங்கலம் - பேரியாழ்.
பெருங்காடு - மயானம்.
பெருங்குறிச் சபை - ஊர்ப் பேரவை.
பெருங்கை - யானை.
பெருஞ்சாய் - பேராற்றல்.
பெருஞ்சோறு - அரசன் படைத்தலைவர்களுக் களிக்கும பேருணவு; படை விருந்து.
பெருநடை - கூத்துவகை.
பெருநம்பி - இளவரசா பட்டப பெயர்.
பெருநெறி - முதநி நெறி; பெருவழி.
பெருந்தனம் - கணிகையரில் ஒரு பிரிவினா.
பெருந்திணை - பொருந்தாக் காமம.
பெருந்தேவி - பட்டமகிஷி.
பெருநீர் - கடல.
பெருப்பித்தல் - பெரிதாக்குதல்; புனைந்து கூறுதல்.
பெருப்பு - பெருக்கை.
பெருமங்கலம் - வாழ்த்து.
பெருமஞ்சிகன் - நாவிதன.

***பெருமடை*** - சோற்றுப்பலி.
***பெருமலை*** - இமயம்; பனிமலை.
***பெருமிதம்*** - மேம்பாடு; பேரெல்லை.
***பெரும்பிழுக்கை*** - கூத்து வகை.
***பெரும்பிறிது*** - இறப்பு.
***பெரும்பி*** - நிலத்தின் ஆண்டு வருவாய்.
***பெரும்பின்*** - மார்பணி.
***பெரும்பேது*** - பெருமபித்து; சாக்காடு
***பெரும்பொழுது*** - கார் முதலிய கால வகை.
***பெருவனம்*** - கடல.
***பெறுக்கல்*** - அரிசி.
***பெறுதல்*** - அடைதல, பிரசவிதல, அறிதல.
***பெறுதி*** - இலாபம்.
***பெறுத்தல்*** - அடைவித்தல.
***பெற்றம்*** - பெருமை; காற்று; பசுமாடு.
***பெற்றி*** - தன்மை; பெருமை; இயல்பு; நிகழ்ச்சி; பேறு; முறை.
***பெற்று*** - செல்வாக்கு; எருது; அடுகது.

## பே

***பே*** - அச்சம; நுரை; மேகம.
***பேஎம்*** - அச்சம்; மேல.
***பேடகம்*** - துகில்வகை.
***பேடு***- அலி; காமனுடல்; ஊர், நடுவிரல.
***பேணுதல்*** - போற்றுதல்; உபசரித்தல; ஒத்தல; மதித்தல்.
***பேதகன்*** - வேறுபட்டவன்; கலப்புசசாதியான.

**பேதலித்தல்** - வேற்றுமைப் படுதல்; மாறுதல்; மனங் குழம்புதல்.
**பேதறுத்தல்** - கலக்கம் ஒழித்தல்.
**பேது** - உன்மத்தம்; அறியாமை; வருத்தம்; மயக்கம்.
**பேதுறவு** - மயக்கம்; துன்பம்.
**பேதை** - அறிவிலி; பெண்.
**பேம்** - அச்சம்.
**பேயமன்று** - பாலைசாலை.
**பேய்த்தேர்** - கானல் நீர்.
**பேரி** - முரசு.
**பேரியல்** - பெருந்தன்மை.
**பேர்த்தும்** - மறுபடியும்.
**பேழை** - பெருமை; பெட்டி.
**பேழ்** - பெருமை.
**பேழ்கணித்தல்** - அஞ்சுதல்; கண்மூடுதல்; மருண்டு விழித்தல்.
**பேழ்வாய்** - பெரிய வாய்.
**பேறு** - பெறுதல்; செல்வம்.
**பேனம்** - நுரை.

## பை

**பை** - பசுமை; அழகு; வலி; அரவின் படம்.
**பைங்கண்** - குளிர்ந்த கண்; பசுமை.
**பைங்கூழ்** - இளம்பயிர்; விளைநிலம்.
**பைங்கொடி** - கொடிவகை.
**பைஞ்சேறு** - சாணம்.
**பைஞ்ஞிணம்** - புதிய இறைச்சி.
**பைஞ்ஞிலம்** - மக்கட்டொகுதி; படைத்தொகுதி; பசிய நிலம்.

**பைதல்** - ஈரம்; துன்பம்; பசுமை.
**பைந்தல்** - சோபித்தல்; பசுமையாதல்; மிகுதல்; பொங்குதல்.
**பைம்மறித்தல்** - உட்புறத்தை வெளிப்புறமாகத் திருப்பல்; பையின் வாயை மூடுதல்.
**பைய** - மெல்ல.
**பையாத்தல்** - வருந்துதல்.
**பையாப்பு** - துன்பம்.
**பையுள்** - நோய்; துன்பம்.
**பைவரல்** - துயருறல்.

## பொ

**பொகடி**-மாதர் காதணிவகை.
**பொகில்** - அரும்பு.
**பொகுட்டு** - குமிழி; தாமரைக் கொட்டை; மலை.
**பொகுவல்** - ஒரு பறவை வகை.
**பொக்கணம்** - சோளிப்பை.
**பொக்கம்** - வஞ்சகம்; குற்றம்; பொலிவு; பொய்; மிகுதி.
**பொக்கிஷம்** - சேமித்து வைத்த திரவியம்.
**பொக்கு**-பொருக்கு; குற்றம்.
**பொங்கடி** - யானை; சிங்கம்.
**பொங்கத்தம்** - அபயக்குரல்.
**பொங்கர்** - கொம்பு; கட்டுமலை; சோலை; வாடற்பூ.
**பொங்கலாடுதல்** - பஞ்சு போற் பறத்தல்.
**பொங்கல்** - பொங்குகை; அன்னவகை; மிகுதி; உயர்ச்சி; பருமை; கள்.
**பொங்கழி** - தூற்றுத நெல்.

**பொங்குதல்** - கொதித்தல்; கொந்தளித்தல்; துள்ளு தல்: மிகுதல்; மேற்கிளர் தல்; சினத்தல்; செருக்குறு தல்; விளங்குதல்; விரை தல்; செழித்தல்.

**பொசிதல்** - கசிதல்; வெளி யாதல்.

**பொசித்தல்** - புசித்தல்.

**பொசுக்குதல்** - சாம்பலாக எரித்தல்; வாட்டுதல்.

**பொச்சம்** - குற்றம்; பொய்.

**பொச்சாத்தல்** - மறத்தல்; இகழ்தல்.

**பொச்சை** - காடு; குற்றம்.

**பொடிதல்** - தூளாதல்; தேய் தல்; ஒளிமழுங்குதல்; கெடு தல்; வெறுத்தல்; சினத்தல்; கண்டித்தல்.

**பொடித்தல்** - தூளாக்குதல்; கெடுத்தல்; தோற்றுதல்; அரும்புதல்; விளங்குதல்; வெறுத்தல்; புளகித்தல்.

**பொட்டணம்** - சிறுமூட்டை; ஒத்தடம்.

**பொட்டல்** - பாழிடம்; வெளி யிடம்.

**பொட்டி** - வெறுக்கத்தக்க வன்; வேசி.

**பொட்டெழுதல்** - அழிவுறு தல்

**பொட்டை** - குருடு; ஒரு குழூஉக்குறி.

**பொதி** - தொகுதி; குலை; மூட்டை; அரும்பு; உடல்; நெல்; பட்டை; நிறைவு; பிணிப்பு; மூனை.

**பொதிதல்** - நிறைதல்; செமித் தல்; மறைதல்; கட்டுதல்.

பொதியம் - பொதியமலை.
பொதியல் - அம்பலம்; ஒரு மலை.
பொதியறை - கீழறை; நில வறை.
பொதிர்தல் - வீங்குதல்; நடுங்குதல்; பருத்தல்.
பொதிர்த்தல் - குத்துதல்; முரித்தல்.
பொது - சாதாரணம்; மன்று; நடுவுநிலை; சிறப்பின்மை.
பொதுக்குதல் - விலக்குதல்; மறைத்தல்; கவர்தல்.
பொதுக்கை - அபிநயவகை.
பொதுங்குதல் - வருந்துதல்.
பொதுதல் - துளைபடுதல்.
பொதுத்தல் - முள்பாய்தல்; துளைத்தல்.
பொதுமை - நன்மை.
பொதும்பர் - இளமரச்சோலை.
பொதும்பு - சோலை; குறுங்காடு; மரப்பொந்து; குகை; குழி.
பொதுவர் - இடையர்; பொதுமகளிர்; நடுவர்.
பொதுவில் - அம்பலம்.
பொதுளுதல் - நெருங்குதல்; தழைத்தல்.
பொத்தகம் - மயிலிறகு; புத்தகம்; சித்திரப் படம்.
பொத்தல் - துவாரம்; கடன்; குற்றம்.
பொத்தாறு - ஏர்க்கால்.
பொத்திரம் - எறியாயுதம்.
பொத்திலம் - மரப்பொந்து.
பொத்து - புரை; மூடுகை; பொந்து; வயிறு; தவறு.
பொத்துதல் - புதைத்தல்; வாய்மூடுதல்; மூட்டுதல்;

தைத்தல்; திமூட்டல்; மறைத்தல்; அடித்தல்; தவறுதல்; செய்தல்; நிறைத்தல்.
**பொத்தை** - உடம்பு; பொத்தல்.
**பொந்தி** - உடல்; பருமை.
**பொம்மல்** - பொலிவு; மிகுதி; பருமன்; கூட்டம்; பிரதிமை; சோறு; மகிழ்ச்சி.
**பொய்** - பொந்து; உள்ளீடில்லது.
**பொய்கை** - இயற்கை நீர்நிலை; கோட்டான்.
**பொய்தல்** - பிடுங்கப்படுதல்; துளைக்கப்படுதல்; வீழ்த்துதல்; மகளிர் விளையாட்டு; சிற்றில்.
**பொய்த்தல்** - தவறுதல்; கெடுதல்; வஞ்சித்தல்.
**பொய்யாமொழி** - மறை; திருக்குறள்.
